
# மாணிக்க மணி






வெளியீடு:

மாணிக்கம் சுப்பிரமணியம் பாராட்டு விழாச் சபை

கொக்குவில்

14.02.2010

உ

சிவமயம்

# மாணிக்க மணி

## 70வது அகவை நிறைவும் பொதுநல சேவைக்குமான

# பாராட்டுவிழா மலர்


உயர்திரு. மாணிக்கம் சுப்பிரமணியம்
அவர்களின்
பாராட்டுவிழாச் சபை,
கொக்குவில் – யாழ்ப்பாணம்,
2010.

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | : | மாணிக்க மணி |
| வெளியீடும் அமைப்பும் | : | உயர்திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் பாராட்டு விழாச்சபை. |
| முகவரி | : | கொக்குவில், யாழ்ப்பாணம். |
| மலராசிரியர் | : | திரு. து. தர்மானந்தசிவம் |
| பதிப்பு | : | முதலாவது 2010 பெப்ருவரி |
| அச்சுப்பதிப்பு | : | Andra டிஜிற்றல் இமேஜ். |



கொக்குவில் தந்த கொடையாளி , மனிதருள் மாணிக்கம்
சமூகத்தின் ஒளி விளக்கு, மாணிக்கம் பாக்கியம் எமக்களித்த
மாலதி துணைவர் மாணிக்கமணி சுப்பிரமணியம்.

## பாராட்டுவிழா நாயகருடன் அவரது துணைவியார்



"வாழ்க வளமுடன் பல்லாண்டு"

கொடை மாமணி

**மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின்**

பாராட்டு விழாச்சபை - 2010

# பொருளடக்கம்


ஆசியுரையும் வாழ்த்துரையும் பக்கம்

1. மக்கள் சேவையில் மணி அண்ணா
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் 01
2. தன்னலமற்ற சேவையாளன் வாழ்க பல்லாண்டு
சிவப்பிரம்மஸ்ரீ. சொ. இ. விக்னேஸ்வரக் குருக்கள் 02
3. சேவை மனம் படைத்த வள்ளல்
திரு.அ.பஞ்சலிங்கம் 03
4. சமூகத்தின் ஒளிவிளக்கு
பேராசிரியர் க. தேவராஜா 04
5. பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி
திரு.பா. செந்தில்நந்தனன் 05
6. கல்லூரித் தாயின் மைந்த! வாழி நீடுழி
திரு. பொ. கமலநாதன் 06
7. "கொடுப்பதில் என்றும் குறைவிலா வள்ளலே"
கொக்குவில் இந்துக் கல்லூரி 07
8. "தொண்டில் துணைவரை" மனதார வாழ்த்துகின்றோம்
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசலை அதிபர் 08
9. சீர்குன்றா மாண்பாளர்
திரு.நா. தனபாலசிங்கம் 09
10. எழுபது காணும் ஏந்தல் திரு. மாணிக்கம் சுப்பிரமணியம்
கொக்குவில் நம் ஊர்" நூல் வெளியீட்டுக்குழு – கனடா 10
11. Message from President K.H.C (O.S.A) - Colombo Branch
Dr. K. Ketheeswaran 11
12. Mr. Manickam Subramaniam torns 70 this year M.Indrakumar 12
13. ஏழுபதாம் பிறந்தநாள் காணும் ஏந்தலுக்கு எம் வாழ்த்துக்கள்
திரு. சின்னத்துரை தெட்சணாமூர்த்தி 13
14. கல்வியை மேம்படுத்த உதவும் கனவான்
V. Gunasekaran, Thevakumaran 14
15. மனம் நிறைந்த சேவையாளன்
Dr. V. வேதநாதன், திரு.செ. சண்முகசுந்தரம் 15
16. அருங்கொடை வள்ளலை வாழ்த்துகின்றோம்
திரு. கா. பாலசுப்பிரமணியம், இ. இராசலிங்கம் 16
17. திருவாளர் மாணிக்கம் சுப்பிரமணியம்
திரு. தம்பிள்ளை முத்துக்குமாரசாமி 17

18. கற்பக தருவே வாழ்க

திருமதி. கோதை நகுலராஜா 19

19. கொக்குவில் தந்த பெருமகன்!

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா 20

20. தமிழ்ச் சங்கத்தின் வாழ்த்துக்கள்

திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி 21

21. மனிதருள் மாணிக்கம் பாக்கியம் தந்த சுப்பிரமணியம்.

திரு. சி. குகனேந்திரன் 22

22. சுப்பிரமணியம் என்ற கொடைவள்ளல்

திருமதி. சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் – கனடா 23

23. பாராட்டு காவிய மாலை

Dr. V. வேதநாதன், செ. சண்முகசுந்தரம் 25

24. அறப்பணி மேலும் சிறக்கட்டும்

திரு. ச. சிவானந்தன் 26

25. கொக்குவிலின் மணிமகுடம்

வளர்மதி முன்னேற்றக் கழகம். 27

26. கொக்குவில் தந்த மனிதருள் மாணிக்கம்

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் 28

27. மா. சுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கை ஒரு நோக்கு

திருமதி. ரதி சந்திரநாதன் 29

28. மக்கள் பார்வையில் மணியண்ணா

திரு. து. தர்மானந்தசிவம் 31

29. நன்றி நவிலல்

திரு. இ. செல்வநாதன் 32

## சமூக சேவையாளர் உயர்திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் பாராட்டு விழாக்குழு



**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) :** திரு. பொ. கமலநாதன் (முன்னாள் அதிபர், கொ.இ.க),திரு. அ. அகிலதாஸ் (அதிபர், கொ.இ.க), திரு. இ. செல்வநாதன் (அபி.சங்கச் செயலாளர், கொ.இ.க), திரு.அ. பஞ்சலிங்கம் (முன்னாள் அதிபர், கொ.இ.க.), திருமதி. செ. சகாதேவன் (அதிபர், கொ.இ. ஆ. பாடசாலை), திரு. நா. தனபாலசிங்கம் (அதிபர், உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை).

**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) :** திரு. சி. ஸ்ரீகணேசன், திரு. கா. பாலசுப்பிரமணியம், Dr. V. வேதநாதன், திரு. செ. சண்முகசுந்தரம், திரு. இ. இராசலிங்கம், திரு.இ. ஸ்ரீகாந்தன், திரு. ஆ. சத்தியமூர்த்தி.



# மக்கள் சேவையில் மணி அண்ணா

கொக்குவில் பதியில் மணியெனத் திகழும் மாணிக்கம் – பாக்கியம் தம்பதிகளின் தவப் புதல்வராக எல்லோராலும் மணி அண்ணா என அன்புடன் அழைக்கப்படும் திருவாளர் சுப்பிரமணியம் ஐயா அவர்கள் கொழும்பில் பிரபல வர்த்தகராகத் திகழ்வதுடன், கொழும்பு கதிரேசன் வீதி கதிர்வேலாயுத சுவாமி கோவிலின் தர்மகர்த்தா சபையின் மூத்த உறுப்பினராகவும், இங்குள்ள பொது அமைப்புக்கள், நற்பணி மன்றங்கள் பலவற்றின் உறுப்பினராகவும் ஆலோசகராகவும் இருந்து சமய, சமூக வாழ்வுடன் தன் பெருமுயற்சியையும், பொருளாதாரத்தையும் ஈடுபடுத்தி வாழ்ந்துவரும் பெருமைக்குரியவர். தான் பிறந்த கிராமம் அங்கு வாழ்கின்ற மக்கள் வளர்ச்சிக்கு **"யாவர்க்கும் கல்வியே பிரதானமானது"** என்பதை தன் குறிக்கோளாகக் கருதி கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவி வருவதுடன், சனசமூக நிலையங்கள் போன்ற பொது சேவை நிலையங்களுக்கும் தன்னாலான பணிகளைச் செய்து கொண்டிருப்பவர்.

இத்தம்பதிகள் இல்லறம் என்பது அறவாழ்வு என்பதற்கு இலக்கணமாக இருந்து ஆதரவற்றவர் பலருக்கு வெளியில் தெரியாது உதவிவரும் இயல்பினராவார்கள். இவர்களது பிள்ளைகளும் இவரது பணிக்கு உறுதுணையாக இருந்து வருவது இவரது பணித்தொடருக்குரிய சான்றாகும். திருவாளர் சுப்பிரமணியம் ஐயா–ஸ்ரீமதி மாலதி தம்பதிகளின் பணி பெருகி அனைவர்க்கும் பயன்படவும், இவர்கள் தீர்க்காயுளும் திடகாத்திர சுகமும் பெற்று வாழ ஸ்ரீ கதிரேசனைப் பணிந்து ஆசீர் வதிக்கின்றோம்.

இவரது பணியை நினைந்து நன்றியுடன் விழா எடுத்து மகிழும் கொக்குவில் மக்கள், கல்லூரிச் சமூகம், விழாக் குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துக் கூறி விழா சிறப்புறப் பிரார்த்திக்கிறோம்.

முத்தமிழ்க்குருமணி, சகலாகமச் சங்கிரகர்
**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்**
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம்.



# தன்னலமற்ற சேவையாளன்
# வாழ்க பல்லாண்டு

யாழ்ப்பாண நகரில் சகல வளங்களும் பொருந்திய கொக்குவில் கிராமத்தில் திரு. மாணிக்கம் பாக்கியம் தம்பதிகள் பெற்றெடுத்த புதல்வனாம் திரு.சுப்பிரமணியம் அவர்கள் இன்று 70ஆவது அகவையில் கால்பதிக்கும் வேளையில் அவர் செய்த பணிகள் சொல்லற்கரியவை. அவற்றிலே எடுத்துக்காட்டாகவும் தந்தை தாயின் ஞாபகார்த்தமாகவும் மஞ்சவனப்பதி முருகன் கல்யாண மண்டபம், தாய் சேய் சுகாதார நிலையம், கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் ஆரம்ப பாடசாலை ஆகியவற்றின் வானுயர்ந்த கட்டடங்கள் சான்று பகர்கின்றன. இன்னும் பற்பல பொதுப்பணிகள் செய்த வண்ணமே உள்ளார்.

அவருக்கு இன்று கொக்குவில் வாழ் மக்கள் சமூகத்தால் பெருவிழா எடுக்கும் இவ்வேளையில் அவர் தொடரும் பணி மென்மேலும் சிறக்கவும் இவ்விழா சிறப்பாக அமையவும், அவர் தம் குடும்பத்தாருடன் ஆண்டு பல இன்புற்று வாழ அன்பு ஆசி கூறி எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகப் பெருமான் திருவருள் கிடைக்கவேண்டுமென்று வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

**சிவப்பிரம்மஸ்ரீ. சொ. ஐ. விக்னேஸ்வரக் குருக்கள்**
பிரதம குரு,
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்,
கொக்குவில்.

# சேவை மனம் படைத்த வள்ளல்

கொக்குவில் மண்ணில் பிறந்து வளர்ந்தவர் திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள். தன் உடன் பிறந்தவர்களைப் போல் இவரும் கொக்குவில் இந்துவில் கல்வி கற்றார் தனது தந்தையாரைப் போல் வணிகத்தில் ஆர்வம் கொண்டு அதில் கால்பதித்து அத்துறையில் பலரும் அறியக் கூடியதாக மிளிர்கின்றார்.

திரு. சுப்பிரமணியம் அவர்கள் தான் கற்ற கல்லூரிக்கும், பிறந்து வளர்ந்த ஊருக்கும் தன்னாலான சேவையை ஆற்ற வேண்டுமென்ற பேரவா மேலீட்டினால் உந்தப்பட்டு எவருமே நினைத்துப் பார்க்க முடியாத செயற்கரிய வற்றைச் செய்துள்ளார். எவ்வளவோ செல்வந்தர்கள் உள்ளனர். இருந்த பொழுதிலும் திரு. சுப்பிரமணியம் அவர்ளைப் போன்று சேவை மனம் மேலோங்கி இருப்பவர்கள் ஒரு சிலரே.

கொக்குவில் இந்துக் கல்லூரி தொடர்ந்து வளர்ச்சி அடைகின்ற ஓர் பாடசாலை. அதனால் அதன் ஆரம்ப காலம் தொட்டு மாணவர்கள் கற்பதற்கான இடநெருக்கடியினைச் சந்தித்து வந்தது. திரு. சுப்பிரமணியம் அவர்கள் தனது பெற்றோர்கள் ஞாபகார்த்தமாக அமைத்துத் தந்த 180 அடி நீளமான மூன்று மாடிக்கட்டடம் கல்லூரியின் இடநெருக்கடியினை நீக்கியதுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடும் செவ்வனே நடைபெற உதவியுள்ளது.

இன்றைய உலகில் வாழும் ஒருவருக்கு தகவல் தொழில் நுட்பமும் ஆங்கிலமும் இன்றியமையாத தேவைகளாகவுள்ளன. இதனை நன்குணர்ந்த திரு.சுப்பிரமணியம் அவர்கள் தகவல் தொழில் நுட்பம் எமது மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் சென்றடையக் கூடியதாகத் தனது காலஞ்சென்ற சகோதரியின் ஞாபகார்த்தமாக "இராஜ பரமேஸ்வரி தகவல் தொழில் நுட்ப மையம்" எனப் பெயரிட்ட நிறுவனமொன்றை அமைத்துத்தந்துள்ளார் இதற்கான காணியினையும் கட்டடத்தினையும் கொள்வனவு செய்து கொக்குவில் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்க நம்பிக்கை நிதியத்திடம் கையளித்துள்ளார். இவ்வாறு எமது கல்லூரிக்கு மட்டுமல்ல, கொக்குவில் கிராமத்திலுள்ள சனசமூக நிலையம், கோவில் போன்றவற்றிற்கும் கொழும்பிலுள்ள கல்விச் செயற்பாட்டு நிறுவனங்களுக்கும் பேருதவி வழங்கியுள்ள **பரோபகார உள்ளம் படைத்த வள்ளல்** அவர்களும் அவருக்கு உறுதுணையாக இருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் அனைவரும் நீடூழி வாழ்ந்து மேலும் பல சேவைகள் ஆற்ற இறைவன் அருளினை வேண்டுகின்றேன்.

**அ. பஞ்சலிங்கம்**
தலைவர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

# சமூகத்தின் ஒளி விளக்கு

உயர்திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் அகவை எழுபது நிறைவையொட்டி வெளிவரும் பாராட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். நாம் பாரிவள்ளல் வாழ்ந்தமையை வரலாற்று ரீதியாகக் கேட்டு வியந்திருக்கின்றோம். ஆனால் ***நவீன உலகின் பாரிவள்ளல்*** ஒருவரை நேரில்காணும் வாய்ப்புக் கிடைத்திருக்கின்றதென்றால் அது அண்ணா சுப்பிரமணியம் அவர்களையே குறிக்கும்.

கொக்குவில் இந்துவின் பழைய மாணவரான அண்ணர் சுப்பிரமணியம் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி, கிராமத்தின் வளர்ச்சிக்கும் ஏன் நாட்டின் வளர்ச்சிக்கும் நிதியுதவி செய்து வருவதனைக் கண்டு அவரைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. சமூக ஜோதியாக விளங்கும் அவருக்குப் பாராட்டுவிழா எடுப்பது எமது கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் விடயம் என்பதில் ஐயமில்லை.

நான் சிறுவயதிலிருந்தே அண்ணர் சுப்பிரமணியம் அவர்களை அறிவேன். நான் கொழும்பில் கல்விகற்ற காலத்தில் ஒவ்வொரு நாளுமே அவரைக் கண்டு கலந்துரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. அவரது அயராத முயற்சியினால் சமூகத்தின் மிகப்பெரிய செல்வந்தராகும் நிலை உருவாகியதெனக் கூறினால் அது மிகையாகாது. அவ்வாறு உழைத்த செல்வத்தில் பெரும்பகுதியை அவர் இன்று சமூகத்தின் அபிவிருத்திக்காக வழங்கி வருவது கண்டு உள்ளம் பூரிப்படைகின்றது. எமது கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மட்டுமல்ல, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, குணபாலன் வித்தியாசாலை என்பவற்றின் அபிவிருத்திக்கும் அவரால் நிதியுதவி வழங்கப்பட்டிருப்பதுடன் மஞ்சவனப்பதி திருமண மண்டபம் உட்பட சனசமூக நிலையங்கள், ஆலயங்கள் போன்ற பொது அமைப்புகளுக்கும் அவரது உதவிக்கரம் நீண்டிருப்பது எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கின்றது. இவரிடம் இணுவில் பொது நூல்நிலையக் கட்டட நிர்மாணத்திற்கு உதவி கோரி நான் சென்ற பொழுது மறுப்பின்றி அவர் சம்மதம் தெரிவித்தமை எனக்கு அவரின் கொடுக்கும் மனோநிலை எப்படிப்பட்டது என்பதை நிரூபிப்பதாக அமைந்திருந்தது.

இத்தகைய கொடை வள்ளலை **எமது நவீன கர்ணனை** வாழ்த்தும் வாய்ப்பை நான் பெரும்பேறாகக் கருதுகின்றேன். அவரின் கொடுக்கும் கரங்கள் தொடர்ந்தும் நீண்டு செல்ல எல்லாம்வல்ல இறைவன் அவருக்கு உடல் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்கவேண்டுமென இறைஞ்சி, அவரது பணியை வாழ்த்தி அமைகின்றேன்.

**பேராசிரியர் க. தேவராஜா**
பீடாதிபதி,
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

## இதழாசிரியர் இதயத்திலிருந்து...

மனிதாபிமானம் கொண்ட மாண்பாளர் ஒருவருக்கு அவர்தம் அளவிடற்கரிய பொதுநல சேவைக்காய், வள்ளல்த் தன்மைக்காய் எழுபதாவது அகவையைப் பூர்த்தி செய்த நிலையில் பாராட்டுவிழா நடாத்தப் பயனாளிகள் முயன்றபோது மலரொன்று உருவாக்க வாவென்று எனை அழைத்தார் எம் அதிபர் அகிலதாஸ் அவர்கள். மறுக்கமுடியவில்லை, ஏனெனில் மாமனிதருக்கு ஓர் மலர் அமைக்க பெற்ற சந்தர்ப்பத்தைப் பெரும் பேறாய் எண்ணினேன்.

பொதுச்சேவை செய்வதனால் பூரிப்பு அடைபவர்க்கு நாம் வாழ்த்தும் வாழ்த்தொலிகள் அவர்தம் சேவையை மென்மேலும் பெருக்கும், அவர் ஆயுளைக் கூட்டும். மேலும் மேலும் செல்வத்தைப் பெருக்கும் என்றதனால் அதற்குச் சம்மதித்து குறுகிய நாளில் வெகுவிரைவாய் சிரமம் பாராது செயற்பட்டேன். கொக்குவில் இந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. செல்வநாதன் அவர்களின் உதவியுடன் முன்னாள் அதிபர் திரு. பஞ்சலிங்கம் அவர்கள் வழிகாட்ட, அன்ரா பதிப்பகத்தில் அச்சேற்ற முடிவெடுத்தோம். அன்ரா உரிமையாளர் த. ஜெயரஜீபன், அவர்தம் தொழிற்குழுவில் அங்கம் வகிக்கும் த. கஜேந்திரன், சி. சுஜீபன் ஆகியோரின் அளப்பரிய உதவியினால் பாராட்டு மலராய் பக்குவமாய் வெளிவந்தது. மலரொன்று உருவாக பங்களித்த யாவர்க்கும் இதழாசிரியர் என்ற வகையில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய சூழலினால் நலிவுற்ற தமிழ்ச்சமூகம் கொடைமாமணி சுப்பிரமணியம் கொடையால் கல்வியில், உடல் நலனில், ஆன்மீக வாழ்வில், விளையாட்டுத் துறையில், கணனித் தொழில்நுட்பத்தில், அறிவியல் துறையில் வளர்ச்சிபெற வாய்ப்பேற்பட்டுள்ளது. இவரின் பொதுநல சேவை முன்னுதாரணமாய் ஏனைய பணம் படைத்தவர்களுக்கும் ஆவலைத் தூண்டும் ஒன்றாய் அமையட்டும். சுகநலம் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

**து. தர்மானந்தசிவம்**
ஆசிரியர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# சுப்பிரமணியம் தம்பதியினரின் வாழ்க்கைப் பதிவுகள்



கம்பீரமான இளமைத் தோற்றம்



திருமணத் திருநாளின்போது



காஷ்மீரில்



அண்மைக்கால தம்பதியினர் தோற்றம்




குடும்ப சமேதராய்

# பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கொக்குவில் பதியிலே உதித்த சமூக சேவையாளரும் பிரபல வர்த்தகருமான திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் சேவை குறித்து மலர் வெளியிடப்படுவதை அறிந்ததும் பேரானந்தமடைந்தேன்.

கொக்குவில் சி.சி.த.க பாடசாலை மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய பள்ளிகளில் பயின்ற இவர் "திரைகடலோடியும் திரவியம் தேடி" **தனக்கென வாழாது ஊர் நலனுக்காகப் பொதுப் பணியாற்றும் கொடை மனமுடையவர்** என்பதை நான் அறிவேன். இத்தகைய வள்ளண்மை யாளர்களால்தான் கிராமங்கள் பொலிவு பெறுகின்றன.

ஆற்று வழியாகவும் ஊற்று வழியாகவும் நீரினைப் பெறுகின்ற குளிர்ச்சி நிறைந்த பொய்கையைப் போலவும் ஊரின் நடுவே கிளை பரப்பி இன்சுவையுடைய கனிகள் நிறைந்து காணப்படும் பயன்தரு மரம் போலவும் நற்பண்பாளர்களிடம் செல்வம் சேருமேயானால் அது எல்லோருக்கும் பயன் தருவதாய் அமையும் என்பார்கள். இதனை வள்ளுவர்

*"பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்*
*நயனுடையான் கட்படின்"*

என்று கூறியுள்ளார்.

இதற்கு இலக்கணமாய் அமைந்த திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இராஜபரமேஸ்வரி தகவல் தொழில்நுட்ப நிலையம், விளையாட்டு மைதான பார்வையாளர் மண்டபம், ஆரம்ப பாடசாலை மண்டபம் என்பனவற்றை நிறுவியதோடு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் எழில்மிகு கல்யாண மண்டபம் ஒன்றினையும் அமைத்துத் தந்துள்ளார். ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தின் காணிக்கொள்வனவு, கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மூன்று மாடிக்கட்டடம், கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் நான்காது மேற்தளம் என்பனவும் இவரது மனமுவந்த சேவையை என்றும் பறைசாற்றுவதுண்டு.

இத்தகைய நற்பணியாளரின் சேவையும், நலமும் ஆயுளும் பெருக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு இந்த மலர் சிறப்படைய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனநிறை வடைகின்றேன்.

*"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறிவாளன் திரு".*

**பா. செந்தில்நந்தனன்**
பிரதேச செயலர்,
நல்லூர்.

# கல்லூரித் தாயின் மைந்த! வாழி நீடுழி

இன்று திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களது 70வது பிறந்த தினத்தை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழவடைகின்றேன். அவர் கல்லூரித் தாய்க்கு ஆற்றும் சேவை உன்னதமானது, உயர்வானது.

தமது நூறாவது அகவையில் கால்பதித்து, விழாக்கோலம் காணக் காத்திருக்கும் கல்லூரித் தாயானவள், தன்மைந்தன் தனக்காற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கும் தன்னலமற்ற உன்னதமான சேவையினால் உளம் பூரித்து நின்று மானசீகமாகத் தனது வாழ்த்தினையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றாள்.

மாணவர்களின் கல்விக்கென மூன்று மாடிக் கட்டிடம், கணனிக்கூடம் என்பவற்றை அமைத்துத் தந்ததோடு அமையாது மாணவர் விளையாட்டுத் திடலில் பார்வையாளர் அரங்கினையும் அமைக்க முன்வந்திருப்பது பெருந்தன்மைக்குரிய விடயமாகும்.

இத்தகைய **பெருந்தகையை** இந்நன்னாளில் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். இவரும் அவர்தம் குடும்பமும் சிறப்புற்று நீடுழி வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு இவரது உன்னதாமன சேவை மேலும் தொடர எனது வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

**திரு. பொ. கமலநாதன்**
இளைப்பாறிய அதிபர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## "கொடுப்பதில் என்றும் குறைவிலா வள்ளலே" ஆண்டுபல வாழ்ந்திடவே நெஞ்சார வாழ்த்துகின்றோம்

உழைப்பினால் உயர்ந்து
உதவும் கரங்களும் இணைந்து
இன்றைய நாளில் அகவை எழுபது
இன்னும் பல ஆண்டுகள் கடந்து
உங்கள் பயணமும், பணிகளும்
இன்று போல் என்றும் தொடரட்டும்.

நல்ல மனிதர்களையும்
நல்ல செயல்களையும் – வரும்
காலங்கள் மறப்பதில்லை
கொக்குவில் கிராமம் கொடுத்த
திரு. மாணிக்கம் சுப்பிரமணியம்
அவர்களும் அப்படித்தான்

மாணிக்கம். பாக்கியம் தம்பதிகளின்
மகனாய் 1940 இல் மலர்ந்து
இன்றோ வேரோடி
விழுதுகள் ஊன்றி பலருக்கும்
நிழல் தரும் ஆலவிருட்சமாய்
கிளை பரப்பி நிற்கிறார்.

உழைப்பும், முயற்சியும் கைகொடுக்க
தந்தையுடன் இணைந்து
தனயனும் தொழில் பயின்று – இன்று
தலைநகரில் தொழிலதிபராய்
ஊர் போற்றும் உத்தமராய்
உயர்ந்தே உள்ளார்.

தனியனாய் இல்லாமல்
மணவினையில் மங்கை மாலதியைக்
கரம் பிடித்து கழிந்த நாட்களில்
மக்களையும் மகிழ்வுடனே பேணி
நல்ல தந்தையாய் வழிகாட்டி
நடத்திச் சென்றார்.
மாண்புடனே வாழ்ந்து வரும்
மங்கலமான நாளில்
தன்னலம் மட்டும் பார்த்தார் இல்லை
சுற்றங்கள் கூட்டி
உறவுகள் பேணி
ஊர் போற்ற வாழ்கிறார்.

கொக்குவில் கிராமத்தின் தலைக்கல்லூரி
கொக்குவில் இந்துவில் – நற்கல்வி
தான் பெற்றதை மறக்காமல்
கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில்
இவர் பாதங்களும் சளைக்காமல்
இணைந்தே பயணிக்கின்றன.

கொக்குவில் இந்துவில் இவர் பணிகள்
இமயம் போல் உயர்ந்து நிற்கும்
கல்லூரியின் பதிவுகள் – எத்தனை
காலம் கடந்தாலும்
இவர் பெயரை மறக்காமல்
நிச்சயமாய் எடுத்தியம்பும்.

கல்லூரியின் உயர்வுக்காய்
இராஜபரமேஸ்வரி கணனி நிலையம்,
பாக்கியம் ஞாகார்த்த புலமைப்பரிசில் நிதியம்,
தாய்,தந்தை பெயர் சொல்லும்
ஓங்கி உயர்ந்த மூன்று மாடிக் கட்டம்
இவை யாவையும் தாண்டி....

வளர்ந்து வரும் கல்லூரியின்
விளையாட்டுத் துறைக்காக
மலரப் போகும் ஸ்ரேடியம்
இவை எல்லாம் கல்லூரி மீது
இவர் கொண்ட – தீராத
பற்றுதலை பறைசாற்றும்.

நூற்றாண்டைக் காண என
விரைந்து பயணித்த கல்லூரி
தன் புகழை நாற்றிசையும் பரப்பி
தன் பயணத்தை தொடர்வது போல்
நீங்களும் நூற்றாண்டைக்
கடந்தே பயணிக்க வேண்டும்
என்றும் எம்மோடு பிரியாது
இணைந்தே இருக்க வேண்டும் என இறைவனை
இறஞ்சுகிறோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**கல்விசாரா ஊழியர்கள்**
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

# "தொண்டில் துணைவரை"
# மனதார வாழ்த்துகின்றோம்

நற்பணிகளுக்கு வாரி வழங்கும் உள்ளம் கொண்ட சமூக சேவையாளராகிய **கிராம அபிவிருத்திச் செம்மல்** திருவாளர் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் சேவையை இன்றைய நன்னாளில் பாராட்டுவதில் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலைச் சமூகம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.

இப் பாடசாலை ஆரம்பக் கல்விக்கான பல மாணவர்களை உள்ளீர்த்த போதிலும் இடம் பற்றாக்குறை காரணமாக கல்விச் செயற்பாடுகளை முழு நிறைவாக்க முடியாத நிலையிலிருந்தது. இக் குறைபாட்டினை நிறைவு செய்யும் பொருட்டு 2004ம் ஆண்டில் தரும சிந்தனையாளர் மாணிக்கம் சுப்பிரமணியம் ஐயா அவர்களை நாடிய போது **தானங்களில் சிறந்தது கல்வித் தானம்** என்பதை நன்கு உணர்ந்தவர் ஆகையால் மாணவர் நலன் கருதி பல தேவைகளுக்குப் பொருத்தப்பாடுடைய வகையில் ஒரு மண்டபத்தினை அமைப்பதற்கு பெரும் நிதியை மனமுவந்து வழங்கியுதவினார். அவர் கொடையினாலும் இறையருளினாலும் இம் முயற்சி விரைவில் பூர்த்தியாக்கப்பட்டது. கற்றல் கற்பித்தல் வள வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது கண்டு எமது சமூகம் மகிழ்வடைகின்றது.

கருணையோடும் தரும சிந்தனையோடும் கூடிய அவரது பணிகள் என்றும் பாராட்டுக்குரியவை, அவரது பணிகளை, அறிவுப் பயிர்வளர்க்கும் ஏனைய அறிவாலயங்களும், ஆன்மீகச் சுடர் வழங்கும் ஆலயங்களும், மக்கள் நலன் பேணும் நிலையங்களும் கொக்குவில் சூழலிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தலைநிமிர்ந்து அனைவருக்கும் வழிகாட்டிகளாக பறை சாற்றி நிற்கின்றன.

மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க வாழ்ந்து தன் துணைவரின் இத்தனை வெளியீடுகளுக்கும் ஒத்தாசை நல்கி வரும் திருமதி மாலதி சுப்பிரமணியம் அவர்களை நாம் மனதார வாழ்த்தி நிற்கின்றோம். இல்லறத்தின் சிறப்பு இல்லாளின் சிறப்பிலேயே உள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதாக இவர்களின் இல்வாழ்வு அமைந்துள்ளது.

செழுங்கிளை தாங்கும் செல்வந்தர்களாக தம் நாட்டையும், தாம் பிறந்த மண்ணையும், தாங்கள் கற்ற பாடசாலையையும் நினைவில் நிறுத்தி இருவரும் சேவை செய்து வருவது எமது மண்ணிற்கும் மாசற்ற மனித நேயத்திற்கும் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்து அவர்களது அளப்பரிய சேவைகளுக்கு நன்றிகளைக் கூறி "தொண்டில் துணைவராக" என்றும் மாணிக்கம் சுப்பிரமணியம் விளங்கவும் அவர் துணையாரின் சேவைகள் துணை நிற்கவும் வாழ்த்துவதில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைச் சமூகம் சார்பில் பெருமகிழ்வு அடைகின்ற அதே வேளை அவர்களது இல்வாழ்வு மேலும் சிறக்க இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*அதிபர்*
*யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசலை.*

# சீர்குன்றா மாண்பாளர் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் சேவையை பராட்டி அகவை 70ல் வாழ்த்துகின்றோம்.

பல்லோராலும் போற்றப்படும் பண்பாளன் பரோபகாரி மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் அகவை எழுபதின் பிறந்த நாளையொட்டி பெருமகனின் சேவைதனைப் பாராட்டி நன்றி கலந்த வாழ்த்தும் பேறு கிடைத்தமைக்காக மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய உலகின் மனிதவள அபிவிருத்தியின் மையமாக விளங்குபவை பாடசாலைகளே யாகும். அத்தகைய அறிவு வாழ்க்கைக்கு தனிமனிதனாக நின்று சிகரம் வைத்து சேவையாற்றும் பன்பாளனின் பிறந்த நாளையும் அவர்களின் சேவையையும் ஊர்திரண்டு ஒன்று கூடி வாழ்த்துத் தெரிவிக்கும் நன்நாளினை நினைத்து பெருமிதம் கொள்கின்றேன்.

சொல்லும் செயலும் ஒன்றாகவே என்றும் விளங்கும் பெரியாரான சுப்பிரமணியம் அவர்கள் வெற்றுரைகளை வழங்குவதில்லை, வீண் ஆராவாரமும் தற்புகழ்ச்சியும் கொண்டவருமில்லை. தூய்மையான எண்ணமும் சிந்தனையும் உறுதியான செயற்திறனும் படைத்திட்ட பண்பாளர். **மாணிக்கத்திலிருந்து பட்டை தீட்டி ஆய்ந்தெடுத்த மணியாகத்திகழும் மணியண்ணை** அவர்கள் வித்தியாதானத்திற்குப் பெரு நிதியை வாரி வழங்கி அடிப்படை வசதிகளை செயற்களமாக நடாத்தி வருகின்றார் என்பதற்குப் பல எடுத்துக் காட்டுக்களை சுட்டிக்காட்டலாம், கொக்குவில் பகுதியிலுள்ள பாடசாலைகள், சுகாதாரநிலையம், முன்பள்ளிகள் நூலங்கள் மட்டுமன்றி ஆலயங்களிற்கும் பல்வேறு வகைகளில் செயல்திறன் மிக்க உதவிகள் செய்துள்ளார்.

யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசலைக்கு குணக்குன்றாக நின்று பலவழிகளிலும் ஆக்கமும் ஊக்கமுமளித்து வருகின்றார். வித்தியாசாலை பல சந்தர்ப்பங்களில் தளர்ந்து தடுமாறிய வேளையில் இன்முகம் காட்டி அன்புடன் வழங்கிய அறப்பணிகள் எமது தளர்வை தணித்தது. பாடசாலையில் விளையாட்டு மைதானமின்றி தளர்ந்து சோர்வடைந்த வேளையில் ஏழு பரப்பு காணியை வாங்கி அன்பளிப்பு செய்து வித்தியாசாலை சமூகத்தின் உள்ளத்தில் உறைவிடமாக விளங்குகின்றார். அத்துடன் வித்தியாசாலையின் பாவனைக்கு வழங்கிய ஒலிபெருக்கி சாதனங்கள், நாட்டின் அசாதாரண சூழ்நிலை காலங்களில் மாணவச் சமுதாயத்திற்கு பல துன்பங்களும் இறுக்கங்களும் அடுக்கடுக்காகத் தொடர்ந்த வேளையில் அவர்கள் கற்றலில் இருந்து திசைமுகப்படாது கற்றவைத் தொடர்வதற்கு தேவையான கற்றல் உபகரணங்கள் அனுப்பி வைத்து உதவிய பெருந்தகையாளன். இவ் வித்தியாலயத்தின் 50வது ஆண்டு பொன்விழாவை இவ்வாண்டில் கொண்டாடவுள்ள போது முன்னாயத்தமாக மணி மாடம் சூழ்ந்த திறந்த வெளி அரங்கை அமைத்துத் தரவுள்ள சான்றோனை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வாறு அறிவை வளர்க்க பேரூக்கம் அளித்து பாடசாலைகளை புதுப்பித்து புத்தணிகள் அணிந்து பொலிவுற புது மெருகூட்டிய பெருத்தகையாளரான சுப்பிரமணியம் அவர்கள் மூதறிவு பழுத்த பெரியாராவர். அவர் நீடுழி வாழ்க! உள்ள உரமும் உடல் நலமும் வளர்வனவாகுக! மேன் மேலும் ஆயிரம் பிறை கண்டு பொலிவுற வேண்டுமென உயரப்புலம் உத்துங்க விநாயகப் பெருமானை வேண்டி மனமார வாழ்த்துகின்றேன்.

**நா. தனபாலசிங்கம்**
அதிபர்,
யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்
ஆனைக்கோட்டை.

# எழுபதுகாணும் ஏந்தல் திரு. மாணிக்கம் சுப்பிரமணியம்

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள் **நாட்டுப்பற்று, சமூகப்பற்று, சமயப்பற்று, கல்விப்பற்று நிறைந்த** பெரியார் இவர் இறையருளால் எழுபது அகவைகள் நிறைவு செய்துள்ளார் என்பதை அறிந்து இவரிற்கு எங்கள் உள்ளம் கனிந்த நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

மனிதன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தான் என்பதைவிட அவன் வாழ்ந்த ஆண்டுகளில் சமுதாயத்திற்கும், தான் பிறந்து வாழ்ந்த நாட்டிற்கும் என்ன செய்தான் என்பதே முக்கியமானதாகும். அந்த வகையில் திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள் இளவயதிலிருந்தே சமுதாய உணர்வுடையவராக விளங்கி பல நற் கருமங்கள் ஆற்றி வருவதை மறக்க முடியாது. இவர் தனது உழைப்பின் மூலம் திரட்டிய தனத்தினை தர்ம வழிகளில் செலவு செய்வதற்கு பின் நின்றதில்லை. எமது கிராமத்துக் கல்விக்கூடங்கள், ஆன்மீகத் தலங்கள், சனசமூக நிலையங்கள் போன்வற்றின் வளர்ச்சிக்கு அன்னார் ஆற்றிய பணி அளப்பரியது. சாதி சமயத்திற்கு அப்பாற்பட்டு நின்று தமது ஊரிலும், தன்னிடம் உதவி நாடி வந்தோர்கட்கும் எவ்வித வேறுபாடுமின்றிச் செயற்பட்டு, சமூகத்திற்கு ஓர் எடுததுக்காட்டான தொண்டனாகத் திகழ்ந்து வருகின்றார்.

பெரியார் திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள் எழுபது வயது கடந்து எழுபத்தொன்றாவது வயதில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில் தனதுகுடும்பத்தினருடன் மென்மேலும் நீடு இனிது வாழ்ந்து மக்கள் சேவையில் தொடந்து ஈடுபட அம்மை அப்பன் அருள்புரியப் பிரார்த்திக்கிறோம்.

நன்நிலம் தனிலே நாம்பிறந் தென்னபயன்
தன்நிலம் வாழ வாழாதிருப்பின்
தன்னலம் கருதா தயாளனே
கொக்குவர் கொண்ட மாமணியே
மாணிக்கம் தந்த மரகதமே
வாரி வழங்கிடும் வள்ளலே — உனை
வாயார வாழ்த்திப் பாடுகின்றோம்
வாழிய! வாழிய! வாழியவே!

**"கொக்குவில் நம் ஊர்" நூல் வெளியீட்டுக்குழு,**
கனடா.

# சுப்பிரமணியம் தம்பதியினரின் வெளிநாட்டுப்பயண நினைவுச் சுவடுகள்



வாஷிங்டன் வெள்ளை மாளிகை முன்பாக




பழைய மாணவர் சங்க கனடா கிளையினருடன்



பிரான்ஸ் பாராளுமன்றத்தின் முன்றலில்



அவுஸ்ரேலியாவில்



லண்டன் மாநகரில்



தாய்லாந்தில்

# Message from President of Kokuvil Hindu College (Old Students' Association) Colombo Branch

As president of Colombo, O.S.A, of kokuvil Hindu College, I am pleased to extend my warm regards and best wishes to Mr.M.Subramaniam, one of our vice presidents, for a very happy, healthy and prosperous long life on his 70th birthday falling on January 28,2010. Every one of our members in Colombo join me in this message to wish him for having reached the mile – stone decade.

Sixty they say is man's average life – span. But almighty has graciously blessed Mr. Subramaniam a much longer span to complete his philanthropic acts in helping financially many public organizations both in Jaffna and Colombo.

kokuvil Hindu College, in the last few years, had been particularly fortunate to receive perhaps the largest share form Mr. Subramaniam – the Centenary building of over 8 class rooms in two stories with an Assembly hall was built by him at the cost more than Rs. 13 million and donated to the college in the year 2004. In addition, large house with 3 larchems of land adjoining the College play – ground was purchased by him for Rs. 1.2 Million and donated to the College in the year 2005. Late last year (2009) the College acquired a vital piece of land in 2 larchems with a house for the expansion of the College – play ground to meet the International Standards. This we must accept may not have been materialized hae Mr . Subramaniam stepped in to provide the short fall of Rs. 2.5 Million to complete the purchase. These are not all. He has now launched on building a pavilion at the eastern wing of the College – play ground with an estimated cost of more than Rs.10 Million. The School community and we the past pupil great- fully acknowledges these valuable contributions for the development of our Alma Mater.

May he live long and let the seventies be action packed as in the previous decades.

**Dr. K.Ketheeswaran J.P**
Presiden, K.H.C. (O.S.A.) Colombo Branch.

# Mr. Manickam Subramaniam turns 70 this year.

Mr Manickam Subramaniam one of our Old Students of Kokuvil Hindu College has been contributing generously to our College for the last several years. He was born 70 years ago in Arasady, kokuvil west and completed his studies at, Kokuvil Hindu College in 1956.

He is one of the trustees of Sri kathiresan Temple in Sri Laka Kathiresan and has business of importing & exporting and few other business at Sri Kathiresan St in Colombo-13.

I am very proud to list below his contribution to our school and to community

**Contributions to kokuvil Hindu College**

1. A3 storey Centenary Building in the name of the parents Manickam and packiam
2. Fully equipped Computer Centre in name of late sister Rajaparameswary
3. Pavillion for Sports (current project)
4. Primary School (upstairs only) for 500 students

***Contibutions to community***

1. Kalyana Mandapam (wedding hall) at Manchavanapathy Temple
2. kokuvil West public Library – (Pre School, Medical Centre, Consultant's room, Reading room) – all in one building

**Contibution to the primary School at Uyarapulam**

1. He has given Land for playground

On behalf of our to kokuvil Hindu College Old Students Association, I wish him well and a very happy 70th Birthday.

His brother Manickam Sivachandran who is the vice president of to Kokuvil Hindu College OSA Ausrralia, is also generously contring our OSA Australia, is also genously contributing to our OSA.

**M. Indrakumar**
President,
Kokuvil Hindu College OSA Australia.

# எழுபதாம் பிறந்தநாள் காணும் ஏந்தலுக்கு எம் வாழ்த்துக்கள்

கொக்குவில் மண் பல நல்லோர்களைத் தந்திருக்கிறது. கொக்குவில் இந்துக் கல்லூரி பல உத்தமர்களையும் உருவாக்கி இருக்கிறது. தம் வாழ்நாளில் பெற்ற வெற்றிகளைத் தம் ஊர்மக்களுடன் பங்கிட்டுக் கொண்டோரில் முதன்மையானார் திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள். கொக்குவில் மக்களின் சுகநலனைக் கருத்திற்கொண்டு ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம். அறிவு வளர்ச்சியை மனதில் கொண்டு சனசமூக நிலையம் ஆகியவற்றிற்கு கட்டடங்கள் கட்டிக் கொடுத்ததுடன் நிற்கவில்லை திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் பணி. தனது பெற்றோரின் நினைவாக ஒரு பெரிய கட்டிடத்தைத் தான் கல்வி கற்ற கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு தமது பெற்றோர்களான திரு. திருமதி. பாக்கியம் மாணிக்கம் தம்பதிகளின் நினைவாக கட்டி வழங்கினார்.

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திற்கு பல உதவிகள் செய்தார். அவற்றில் முதன்மையானது அங்கு அவர் அமைத்த கல்யாண மண்டபம். **சமூகத்துறை, கல்வித்துறை, சுகாதாரத்துறை ஆன்மீகத்துறை ஆகியவற்றோடு நிற்காமல் விளையாட்டுத் துறைக்கும் தன் பாரிய பங்களிப்பை வழங்கும் முகமாக** கொக்குவில் இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்திற்கு கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூாற்றண்டு விழாவை ஒட்டி பார்வையாளர் அரங்கம் ஒன்றைக் கோடிக் கணக்கான ரூபாக்கள் செலவில் அமைத்துக் கொடுக்க முன்வந்து கட்டட வேலைகளை ஆரம்பித்துள்ளார். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலைக்கும் கட்டட அபிவிருத்திக்கு பேருதவி செய்துள்ளார். உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலைக்கு விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுத்துள்ளார். கொக்குவிலுடன் அவர் சேவைகள் நின்று விடவில்லை. கொழும்பு தமிழ்ச்சங்கம், கொழும்பு இந்துக் கல்லூரி ஆகியவற்றின் அபிவிருத்திகளுக்கும் பேருதவி செய்துள்ளார். அவர் செய்து வரும் சேவைகளின் புகழ் இங்கிலாந்துவரை பரவியுள்ளது. எமது சங்கத்தின் 10வது ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து எமது சங்கத்தை கௌரவித்ததை நாம் என்றும் மறவோம்.

அவர் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ எமது பழைய மாணவர் சங்கம் (லண்டன்) வாழ்த்துகிறது. இறை அருள் என்றும் அவருக்கு உரித்தாக வேண்டி நிற்கிறோம்.

**சின்னத்துரை தெட்சணாமூர்த்தி**

**தலைவர்,**

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,**

**ஐக்கிய இராச்சியம்.**

# கல்வியை மேம்படுத்த உதவும் கனவான்

## திரு.மா. சுப்பிரமணியம் அவர்கள்

திரு.மா.சுப்பிரமணியம் அவர்கள் எழுபது வயதை நிறைவு செய்வதையிட்டு கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - ஜெர்மனி — மனம் நிறைந்து வாழ்த்துகின்றது. **கொக்குவில் மைந்தன்,** கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழையமாணவன். அவரது வாழ்கைத்துணைவியும் அதேபோன்றவர் என்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம். கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள் அதைத்தாங்கி நிற்கும் விழுதுகள். திரு.சுப்பிரமணியம் அவர்கள், அவரது துணைவியார் இருவருமாகக் கல்லூரிக்கு அளப்பரிய சேவை செய்து வருகின்றனர்.

கல்லூரியின் தெற்கு வளாகத்தில் மூன்றுமாடிக் கட்டிடம் ஒன்றைக்கட்டி மாணவர்கள் வசதிகளுடன் கல்வி கற்கவும் தன் பெற்றாரின் பெயரை நிலை நிறுத்தவும் "மாணிக்கம் - பாக்கியம் கட்டிடம்" எனப் பெயரிட்டு கல்லூரிக்கு அன்பளிப்புச்செய்துள்ளார். இக்கட்டிடத்தை நாம் நேரிற் பார்க்காவிட்டாலும் படங்களில் பார்த்து வியக்கின்றோம். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசலைக்கும் இத்தகைய உதவி செய்துள்ளார். எம் மாணவர்களின் கல்வியில் அவர் காட்டும் அதீத அக்கறையை இச்செயல்கள் காட்டுகின்றன. யாழ்ப்பாண மாணவர்களுக்கு கல்வியில் ஓர் உயர் ஸ்தானம் எப்போதும் உண்டு. இந் நிலமைக்கு திரு.சுப்பிரமணியம் போன்றோரின் பேருதவியும், ஆசியுமே காரணம்.

விளையாட்டுத் துறையை மேம்படுத்தவும் ஒரு பார்வையளர் அரங்கம் நிறுவ முன்வந்துள்ளார். அவரின் இத்தகைய உதவிகளைப் பெறுவதற்கு, கொக்குவில் இந்துக்கல்லூரி, கல்லூரி சமூகம், கொக்குவில் வாழ் மக்கள் வாய்ப்புப் பெற்றுள்ளனர். நாம் எல்லோரும் அவரும் அவரது குடும்பத்தினரும் மேலும் பல நற்பணிகள் செய்து சிறப்பாக அமைதியாக வாழ இறைவனை வேண்டுகிறோம். எங்கள் பழைய மாணவர் சங்கம் திரு.சுப்பிரமணியம் அவர்களை சீருடன் நிறைவான வாழ்வு வாழ வாழ்த்துகின்றது.

**V. GUNASEHARAN**
PRESIDENT,
O.S.A,
Germany.

**T.THEVAKUMARAN**
SECRETARY/O.S.A,
Germany.

# மனம் நிறைந்த சேவையாளன்

அகவை எழுபதில் கால்பதிக்கும் **சேவைச் செம்மல்** லயன் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களை வாழ்த்துவதில் கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம் மிக்க மன மகிழ்ச்சி அடைகிறது.

இந்நிலையம் 1948 ஆம் ஆண்டு கொக்குவில் மேற்கு மக்களால் ஆரம்பிக்கப்பட்டு, சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து பல சேவைகளைச் செய்து வருகின்றது. அண்மைக்காலங்களில் நாட்டில் ஏற்பட்ட பாதிப்புக்கள் எமது நிலையத்தையும் பாதிக்கத் தவறவில்லை. வளர்ந்து வரும் நிலையத்திற்கு கட்டிட வசதிகள் போதாமையைக் கருத்தில் கொண்டு நிலைய நிர்வாகத்தின் தீர்மானத்திற்கு அமைய, எமது செயலாளர் திரு.செ.சண்முகசுந்தரம் J.P., உப தலைவர் திரு.மு.மகேந்திரராசா, திரு.இ.சிறிகாந்தன் மற்றும் உறுப்பினர்களும் கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாக் கொண்ட ஓயாத உழைப்பாளியும் ஓயாத கொடையாளியுமான உயர் திரு.லயன் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்து கலந்தாலோசித்த பொழுது எதுவித மறுப்பும் இன்றி இரு மாபடிக்கட்டிடம் அமைத்துத்தருவதாக தீர்மானித்தார். உடன் செயற்படுத்தி முடித்து அதன் செயற்பாடுகளுக்காக எம்மிடம் ஒப்படைத்தார். இப்பெரியாரால் கட்டி வழங்கப்பட்ட இந்நிலையத்தில் எமது மழலைகளின் கல்விக்கும், தாய்சேய் நலத்திற்கும், சித்தமருத்துவத்திற்கும், மக்களின் சனசமூக சேவைகளுக்கும், சமூகப்பணிகளுக்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது இவரின் சேவைகள். இதற்கு மட்டுமல்லாது கொக்குவில் கல்வி வளர்ச்சிக்காக கூடங்களையும், மாடங்களையும் அமைத்தும், மங்கல சேவைகளுக்காக மண்டபங்களையும் அமைத்தும், மற்றும் பல சேவைகளையும் செய்து வருகிறார். இதைவிடக் கொழும்பிலும் அளப்பரிய சேவைகளைச் செய்து வருகிறார். தனிப்பட்ட ஒருவரால் இப்படியான பாரிய சேவைத்திட்டங்களை நிறைவேற்றி வருவதை வேறெங்கும் காணமுடியாது.

அவரது இந்த அளப்பரிய சேவைகளுக்கு அவரது துணைவியார் திருமதி மாலதி சுப்பிரமணியம் அவர்களும் உறுதுணையாக இருந்து செயற்படுகின்றார். அவர்கள் இருவருக்கும் எமது நிலையம் என்றென்றும் நன்றியுணர் வோடிருக்கும்.

இப்படிப் பல சேவைகளையும் செய்வதற்கு பெரும் குணம்படைத்த திரு.லயன் மாணிக்கம் சுப்பிரமணியம் தம்பதிகள் நாட்டிற்கும் ஊருக்கும் சேவையாற்ற பல்லாண்டு நலத்துடன் வாழ சூடு உகந்த பிள்ளையாரின் இறைபாதம் பற்றி நிற்போம்.

ஆண்டாண்டு பல்லாண்டு அகிலத்தில் தான் வாழ்ந்து
இன்னமும் பல தொண்டு இங்கெமக்காற்ற நீவிர்
வாழ்த்துகிறோம் வணங்குகிறோம் வாழ்க நீவிர் பல்லாண்டு.

***DR. வி.வேதநாதன்***
தலைவர்

***செ.சண்முகசுந்தரம் J.P***
செயலாளர்,

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்.

# அருங்கொடை வள்ளலை வாழ்த்துகின்றோம்

எம்மினிய கொக்குவில் பதிதனிலே மாணிக்கம் பாக்கியம் பெற்றெடுத்த வள்ளல் பெருமகன் மாணிக்கம் சுப்பிமணியம் அவர்கள் அகவை 70ஐ நிறைவு செய்துள்ளார். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வரும் எங்கள் வள்ளல் பெருமகனை மேலும் ஆயிரமாம் பிறை கண்டு எம் மண்ணுக்கும். மக்களுக்கும் அளப்பரிய சேவைகள் ஆற்றிட மஞ்சவனப்பதி முருகன் திருவருளை வேண்டுகின்றோம். அவரையும் அவரின் நன்மனையாட்டி தடாத கைப்பிராட்டியார் அன்னை மாலதி அம்மையாரையும் வாழ்த்தும் இந்நன்னாளில் அவர்கள் செய்த சேவையைச் சுட்டுதல் சாலப்பொருந்தும் என எண்ணி நினைவு கூர்கின்றோம்.

காங்கேசன்துறை வீதியில் பயணிக்கும் எல்லோரும் வழிபாடியற்றிச் செல்லும் எம் மஞ்சவனப்பதி ஆலய முன்றலில் கம்பீரமாக அமைந்துள்ள அலங்கார வளைவு கட்டி உதவியவர் எம் ஐயா அவர்களே ஆகும். மேலும் மேற்படி ஆலயத்திற்கு பல இலட்ச ரூபா செலவில் ஒரு அழகிய கல்யாண மண்டபத்தைத் தனது தாய், தந்தையரின் ஞாபகார்த்தமாக அமைத்துத் தந்தவர் எம்விழா நாயகன் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களே ஆகும். இது போன்று கொக்குவில் பதியில் உள்ள பல ஆலயங்களுக்கும் வாரி வழங்கியுள்ள வள்ளல் பெருமான் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள்.

*'ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை*
*வைத்திழக்கும் வன் கவனக கணவர்'*

என்ற வள்ளுவர் கூற்றுக்கிணங்க ஈத்துவக்கும் இன்பம் கொண்ட நாயகன் சமயப் பணியுடன் மனம் சாந்தியுறாது கல்விப் பணிக்கும் கோடி கோடியாய் மாரி போல வாரி வழங்கியுள்ளார். இவர் கல்வி பயின்ற கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு நீண்டு நெடிதுயர்ந்த அழகிய மாடிக் கட்டத்தைத் தனது தாய், தந்தையரின் ஞாபகார்த்தமாக நூற்றாண்டு நினைவாக அமைத்துத் தந்துள்ளார். அத்தோடு மேற்படி கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு விளையாட்டுத் துறையின் வளர்ச்சி கருதி மைதானத்தில் ஒரு பார்வையாளர் அரங்கை அமைத்துக் கொடுக்க ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

உருக்கொண்டு வெளியில் உலாவும் நமக்கு மட்டுமன்றி கருக்கொண்டு கருவிலிருக்கும் சிசுவுக்கும் அதைச் சுமந்து ஈன்று தரும் அன்னைக்கும் நலம் வேண்டி எம் கிராமத்தில் "தாய் சேய் நலமனையைக்" கட்டியளித்த கரங்கள் எம் ஐயாவின் ஈந்து சிவந்த கரங்களே.

சாதாரண சிறியதோர் வியாபாரியாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கிய ஐயா அவர்கள் தனது தளராத முயற்சியின் பயனாகவே இன்று பென்னம் பெரிய நிழல் தரும் விருட்சமாகத் திகழ்கிறார் என்றால் மிகையாகாது. நாம் இதுவவரை நினைவுகூர்ந்த கொடைகள் எல்லாம் கடலில் மிதந்துவரும் பனிப்பாறையின் கண்ணுக்குத் தெரியும் மேல்த் தோற்றங்களே ஆகும்.

**மாரியைப் போல் ஈயும் பாரியைப் போன்ற வள்ளலின்** வாழ்கைத் துணைவியார் அன்னை மாலதி அம்மையார் இத்தனை ஈகைகளுக்கும் தம் கணவன் பின் நின்று ஊக்கும் சக்தியாகத் திகழ்கின்றார். பாரிக்கு ஏற்ற பாரியாராகத் திகழ்கின்றார்கள். இருவரையும் அவர் தம் எச்சங்களையும் நீடு வாழ்கவென வாழத்துவதில் எம் மஞ்சவனப்பதி ஆலய தர்மகர்த்தா சபை உவகை கொள்கின்றது.

**கா. பாலசுப்பிரமணியம்**
தலைவர்,

**ஐ. இராசலிங்கம்**
செயலாளர்.

மஞ்சவனப்பதி முருகன் ஆலய பரிபாலன சபை.

# வாரி வழங்கிய வள்ளல் தன்மைக்கான சான்றுகள்



மாணிக்கம் பாக்கியம் ஞாபகார்த்த கட்டடத்தின் திறப்பு விழாவின் போது
அதன் மாதிரியினை நினைவுப்பரிசாக வழங்கிய போது




கொ/ இந்து ஆ. பா. க்கு சுப்பிரமணியம் மாலதி நினைவு மண்டபத்தை
அமைத்து வழங்கியமைக்காக அதிபரினால் வழங்கிய நினைவுப் பரிசு



மஞ்சவனப்பதி கல்யாண மண்டபத்தை திறந்து வைத்த போது



கொக்குவில் இந்துவின் மைதான பார்வையாளர் அரங்க அடிக்கல் நாட்டு விழாவில்

# திருவாளர் மாணிக்கம் சுப்பிரமணியம்

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

இவ்வுலகிலே பிறந்தவர் வாழ்ந்து மடிவதாக மட்டும் அமைந்துவிடக் கூடாது. அவர்கள் தாம் வாழ்ந்ததற்கான பெயரை புகழைப் பதித்தே வாழ வேண்டும். அதனையே வள்ளுவரும், "இவ் வுலகிலே பிறந்தவர்கள் புகழ் நோக்கோடு தோன்றவேண்டும். அந்நோக்கம் இல்லாதவர்கள் பிறக்காமலே இருக்க வேண்டும் என்கிறார். அந்த வாக்கிற்கு இணங்க வாழ்த்து வருபவரே திருவாளர் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள் எனலாம் அவர் 70 வது அகவை காணும் இத் தருணத்தில் அவர் பற்றிய எனது அனுபவங்களை பகிர்ந்துகொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவர் பிறந்த மண் கொக்குவில் என்பர் ஆனால் அவரது அறப்பணி தலைநராகிய கொழும்பு மட்டும் பரவியுள்ளது. எத்தனையோ பணிகளை அவர் புரிந்ததை அவரோடு பழகிய பின்பு நான் அறிந்து கொள்டேன். இலைமறை காய்போல் அவர் புரியும் பணிகள் ஏராளம் தன்னை வெளிப்படுத்தமாலே அடக்கமாக அதுவும் அமைதியாக செற்பாட்டு வருகிறார் "நிறை குடம் தளம்பாது" என்பது பழமொழி அதுபோலவே தன்னை உயர்நிலைப்படுத்தாது அமைதியாக வாழ்ந்து பணியாற்றி வருறார்.

திருவாளர் ஆ.மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள் சமயப் பணிபுரிந்தவர் மொழி மேல் கொண்டகாதலினால் தமிழ்ப்பணியும் புரிபவர். 'கல்வியை கண்ணாக தமிழ் மாணவர்கள் போற்றவேண்டும்' என்பதற்காக கல்விப்பணியும் புரிந்து வருபவர் எமது தமிழ்ச் சமூகம் கைகொடுப்பவர் யாருமின்றி இன்னல்கள் பலவற்றை அனுபவித்து வருகின்றது. சோதனையும் வேதனையும் மிக்க காலத்திலையே சிறந்த சாதனையாளராக இவர் விளங்குகின்றார் அவரது சாதனையை நானும் மெச்சுகின்றேன்.

செல்வம் எல்லோரிடமும் இருக்கின்றது ஆனால் அதனை வைத்திருப்பவர் தமக்கு என மட்டுமே பாவிப்பார்கள் ஆனால் அவர்கள் அறிவதில்லை "செல்வம் கொடுக்கக் கொடுக்க பெருகும்" என்று அதனை நன்குணர்ந்த உத்தமராக இவர் விளங்குகின்றார். அன்பும் கொடையும் அறச் சிந்தனையும் நற் குலத்தில் பிறந்தவர்க்கே அமைவது வழக்கம் அந்த வகையில் குலப்பெருமையை வளர்க்கும் பண்பாளரகவும் எம் மத்தியில் வாழ்ந்து வரும் இப்பண்பாளரை அன்போடு வாழ்த்துகின்றேன்.

ஆழமாக சிந்தித்து பணியாற்றுபவர் திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள் அவரது சிந்தனையின் திறவுகோலாக அவர் குடும்பம் அமைந்தது அவர் செவ்வனே பணிபுரிய வழிகாட்டி வருகின்றனர், தான் பிறந்த மண்ணில் மட்டுமன்றி கொழும்பிலும் குறிப்பாக எமது கல்லூரியில் இரண்டு மாடிக்ட கட்டிடத்தை கட்டித் தந்து எம் மாணவர் மனங்களிலே புதியதோர் இடத்தை பிடித்துள்ளார். தலைநகரில் தமிழ்ப் பணிபுரியும் தமிழ்ச் சங்கத்தில் ஒரு மண்டபத்தைத் தானே அமைப்பித்து இன்றும் தலைநகரில் தமிழ் மணம் கமழ வழிகாட்டியுள்ளார்.

திரு மா.சுப்பிரமணியம் அவர்கள் தான் பிறந்த ஊரின்மீது மிகவும் பற்றும் பாசமும் கொண்டவர். இறைவன் எனக்கு ஏதோ தந்துள்ளான். அதிலே எனது ஊருக்கு அறப்பணி செய்யவேண்டியது தனது கடன் என்று உணர்ந்து செயற்பட்டவர். தேவையற்ற விடயங்களில் அவர்

ஈடுபடமாட்டார். மிகுந்த இறைபக்தி கொண்ட திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஆண்டவன் கொடுக்கிறான் நான் நல்லது செய்வதற்கே என்ற உள்ளத்துடன் தனக்கும் தனது குடும்பத்திற்கும் இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும் ஆண்டவன் அருள் கிடைக்குமளவிற்கு நல்ல கைங்கரியங்களைச் செய்துள்ளார் அவரது பணி அவரது ஊரில் பாடசாலை, கோயில், சனசமுக நிலையம், சுகாதார பராமரிப்பு நிலையம் என்ற பல இடங்களில் பரந்து காணப்படுகின்றது.

1. கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மேல்மாடிக் கட்டிடம் ஏறக்குறைய 600 பேர் வரை இருக்கக் கூடியதாகக் கட்டிக்கொடுத்துள்ளார்.
2. தனது சகோரியின் ஞாபகார்த்தமாக இராஜபரமேஸ்வரி கணனிக்கூடமும் மாணிக்கம்-பாக்கியம் மண்டபம் என்ற பெயரில் 125-25 மூன்று மாடிக் கட்டிடம் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு கட்டிக் கொடுத்துள்ளார்.
3. $2\,^1/_2$ பரப்பு வீட்டுடன் இருந்த காணியைக் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு வாங்கிக் கொடுத்த துடன் நவீனத்துவம் மிக்க பார்வையாளர் அரங்கையும் அமைத்துக் கொண்டிருக்கிறார்.
4. கொக்குவில் குணபாலன் வித்தியாலயத்திற்கு விளையாட்டு மைதானத்துக்குரிய காணி ஒன்றை வாங்கிக் கொடுத்துள்ளார்
5. கொக்குவில் மேற்கு சனசமூகநிலையத்தை இடித்து 2மாடிக் கட்டிடம் கட்டிக் கொடுத்துள்ளார்.
6. சுப்பிரமாணியம் மாலதி சுகாதார பாரமரிப்பு நிலையம் அமைத்துக் கொடுத்துள்ளார்.
7. மஞ்சவனப்பதி ஆலயத்திற்கு காணிவாங்கிக் கொடுத்து கல்யாண மண்டபம், முகப்பு அலங்கார வளைவும் அமைத்துக் கொடுத்துள்ளார்.

இத்தனையும் அவர் செய்துமுடிக்க அவரது திடமான மனமும் அவருக்கு இக் கைங்கரியங்களைச் செய்து கொடுக்க என்றும் துணையான அவரது மனைவி பிள்ளைகளின் ஒத்துழைப்பும் எல்லா வற்றுக்கும் மேலாக இறைவனின் ஆசியும் அவருக்கு என்றும் துணை செய்துகொண்டிருக்கின்றன. பணம் இருந்தால் மட்டும் போதாது நல்லது செய்யவேண்டும் என்ற மனமும் வேண்டும். அத்துடன் அறிவு ஆன்மீகம் கலந்த பணிகளைச் செய்யவேண்டும் என்ற தளராத உள்ளம் வேண்டும். இவ்விதமான பணிகள் யாவும் எதிர்காலத்திலும் பெயர் நிலவ அமைவனவாகும்.

கட்டடம் என்பது வலிமை மிக்கதாக அமைய வேண்டும். அங்கு இருப்பவர்களுக்க ஏதோ ஒரு விதத்திலே அவர்களது வாழ்க்கை மேம்படுத்துவதாக அமைந்திட வேண்டும்.

அதனால் அத்தகைய கட்டங்கள் பயனும் வசதியும் பெற்றனவாக அமைந்து நினைவுச் சின்னங்களாக விளங்குகின்றன. கல், மண் மரம், உலோகம் என்பனவற்றால் கட்டப்பட்டு பயன்தருவதாக அமையும் கட்டடம் பயன்மிக்க கட்டடமாகும். எல்லையற்ற பரம்பொருளை வழிபட அமைத்த கோயில் பணியைவிட காதலால் கனிந்தெழுந்த நினைவுச் சின்னமாகத் திகழும் தாஜ்மஹால் போன்ற கட்டடத்தைவிட பள்ளிச் சிறார்களுக்குக் கட்டிக் கொடுத்த கட்டடப் பணியே மேன்மையானது. அத்தகைய பணிக்கு ஈடு இணை ஏது? அத்தகைய பணியிலே தம்மை இணைத்து பணிபுரிந்த உன்னதமான மாமனிதர் திருவாளர் மாணிக்கம் சுப்பிரமணியம் ஆவார். அவரை நான் மீண்டும் மீண்டும் வாழ்த்துகின்றேன் வணங்குகின்றேன். அவர் பணி மேலும் வளர இறையருள் அவருக்குக் கிடைக்க வேண்டும் என இறைவனைப் பணிகின்றேன்.

**தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி**
அதிபர்
இந்துக் கல்லூரி, கொழும்பு-4.

# கற்பக தருவே வாழ்க

"தோன்றிற்புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற பொய்யாமொழிப் புலவரின் கூற்றுக்கிணங்க புகழோடு வாழ்ந்து வருபவர் திரு.சுப்ரமணியம் ஐயா அவர்கள். கற்பகதருவும் காமதேனுவும் விரும்பியோர்க்கு விரும்பியதைக் கொடுக்கும் கொடையாளிகள். **கொடை எனப்படுவது பிரதியுபகாரம் கருதாது பிறர் தேவையறிந்து அவர் நலனுக்காக** பிறரறியாமல் **ஈந்துவக்கும் சிறப்பானதொரு செயலாகும்.** அவ்வகையில் கொடைவள்ளல் திரு. சுப்பிரமணியம் ஐயா அவர்கள்

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்.
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியங் கோடி ஆங்கோர்
ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற மகாகவிபாரதியாரின் கூற்றுக்கிணங்க மாணவச் செல்வங்கள் படித்துப் பயனடைய யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற பல இடங்களில் பல பாடசாலைக் கட்டிடங்களை அமைத்து பெரும்பணியாற்றியுள்ளார். இக் கொடைவள்ளலின் புகழை இக்கட்டிடங்களே பறைசாற்றி நிற்கின்றன. இவரது குடும்பத்தினருக்கு நீண்ட ஆயுளும் செல்வமும் நிலைக்க ஆண்டவன் அருள்புரிய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**திருமதி. கோதை நகுலராஜா**
அதிபர்,
கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி.

# கொக்குவில் தந்த பெருமகன்!

திரு. மா. சுப்பிரமணியம் அவர்கள் தான் பிறந்த ஊரை மேல்நிலைப்படுத்தி வளம் பெறச்செய்த பெரியார். கொக்குவில் மேற்கைப்பிறப்பிடமாகக் கொண்டவராக இருப்பினும், கொக்குவில் என்னும் பெரிய கிராமத்தையே தன் சேவைக்குள் அடக்கியுள்ளார். பரந்த மனப்பாமன்மையுடன் திரு. மா. சுப்பிரமணியம் அவர்கள் தனது 70ஆவது வயதைப்பூர்த்தி செய்கின்றார் என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகின்டறோம். மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து பயன்தரும் சேவைகள் செய்ய அவருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் இறைவன் அருள்புரிய பிரார்த்திக்கின்றோம்.

**திரு.மா. சுப்பிரமணியம் அவர்களின் சேவைகள் பல துறைகள் சார்ந்தவை.** கல்வி, விளையாட்டுத்துறை, சமூக முன்னேற்றம், பொதுச்சேவை எனப் பல வகையில் தன் சேவை மனப்பான்மையை விரித்துக்கொண்டவர். ஆனைகோட்டை வீதியில் சிறிய காணித்துண்டில் சிறிய வாசிகசாலையாக ஆரம்பித்த கட்டிடம் இன்று மாடிக்கட்டிடமாக வளர்ந்து சிறந்த சனசமூக நிலையமாக ஊர் மக்களுக்கு அதிக பயன் அளிக்கின்றது. மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் அருகே அவர் அமைத்துக் கொடுத்த கலியாண மண்டபம் மக்களுக்கு திருமணசேவைக்கு பெரிதும் உதவுகின்றது.

கொக்குவில் இந்துக்கல்லூரி திரு. மா. சுப்பிரமணியத்தின் வண்மையால் மிகுந்த பயன் பெற்றுள்ளது. அவர் எமது கல்லூரியின் பழைய மாணவர் என்று கூறுவதில் நாம் பெருமையடை கின்றோம். அவரின் துணைவியாரும் எமது கல்லூரியின் பழைய மாணவி என்பது இரட்டிப்பு மகிழ்ச்சியும் பெருமையும். எமது கல்லூரியின் மாணவர்கள் வசதியாக கல்வி கற்க தெற்குப்பகுதியில் மூன்று மாடிக்கட்டிடத்தை தன்பெற்றோர் திரு திருமதி மாணிக்கம் – பாக்கியம் தம்பதியினரின் நினைவாக நிறுவியுள்ளார். அவரின் கல்விச்சேவையை இத்துடன் நிறுத்தாது கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலைக்கும் சென்று, இடநெருக்கடியால் சிக்கியிருந்த சிறார்கள் விசாலமான இடத்தில் வசதியாக இருந்து கல்வி பயில வகுப்பறைகள் கட்டிக்கொடுத்துள்ளார். அவரின் இத்தகைய சேவையை கல்லூரிச்சமூகம் என்றென்றும் வாழ்த்தி நிற்கும்.

கொக்குவில் வாழ் மக்கள் இத்தகைய தாராளகுணம் கொண்ட கோமகனைப் பெற்றமை அதிஸ்டசாலிகள்! அவரின் சேவைகள் இன்னும் நீண்டுகொண்டே செல்கின்றது. கணனிநிலையம் ஒன்றும் தன் காலஞ்சென்ற சகோதரியின் நினைவாக கல்லூரி வளாகத்தில் நிறுவியுள்ளர். அத்துடன் கல்லூரியின் விளையாட்டுத்துறையும் மேம்பட கல்லூரிக்கு பார்வையாளாகள் அரங்கம் ஒன்றை யும் கட்டித்தர முன்வந்துள்ளார் என்ற செய்தியையும் அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். எமது கல்லூரித்தாய்க்கு திரு.மா.சுப்பிரமணியம் ஆற்றிய சேவைகளுக்கு கல்லூரியின் பிள்ளைகளாகிய நாம் என்றும் அவரை வாழ்த்தி நிற்போம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா, இப்பெரியார் தனது குடும்பத்தினருடன் இன்றுபோல் என்றும் நீண்ட ஆயுளுடனும், நிறைந்த செல்வத்துடனும். தேக ஆரோக்கியத்துடனும் வாழ வாழ்த்துகின்றது.

நிர்வாகசபை

**கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா**

# தமிழ்ச் சங்கத்தின் வாழ்த்துக்கள்

புரவலர் ஏ.எம்.சுப்பிரமணியம் அவர்கள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் துணைத் தவிசாளராய் இருந்து வியத்தகு பணிகள் ஆற்றிவருகின்றார். தலைநகரிலே தமிழ்பேசும் மக்களுக்குச் சொந்தமாக விளங்கும் தமிழ்ச் சங்கத்தின் சொத்துக்களைப் பாதுகாவல் செய்யும் அறங்காவலராக விளங்கும் ஏ.எம்.சுப்பிரமணியம் அவர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து துணை நின்று வருபவர். அவரின் பொருள் அறம் எண்ணில் அடங்காத பெரும்பேறு இலக்கியங்களிலே புரவலர்களை நாம் படித்தறிந்து கற்பனை செய்திருக்கின்றோம். ஆனால் **நிஜவாழ்வில் நாம் காணும் பெருவள்ளலாக விளங்குபவர்** திரு.ஏ.எம்.சுப்பிரமணியம் அவர்கள் தான்.

பல லட்சணக்கணக்கான பெரு நிதியைப் பிரதி உபகாரம் கருதாது வாரி வழங்கிக்கொண்டிருக்கும் அவரது வள்ளற்பாங்கு ஒப்புவமையற்றது. எமது சங்கத்திற்கு மூன்றாவது மாடிக் கட்டடத்தை (சுப்பிரமணியம் - மாலதி மண்டபத்தை) அமைத்துத் தந்ததோடு மட்டுமல்லாமல் மேலும் தமிழ்ச் சங்கத்திற்கு மின்தூக்கி அமைக்கும் பெரும்பணி இலட்சக்கணக்கான நிதியைக் கொண்டது. அந்தப் பெரும் பணிக்குத் தம்மை இன்று அர்ப்பணித்துள்ள அவரும் அவரது துணைவியாரும் பிள்ளைகளும் எமது நன்றிக்கும் பாராட்டுக்குமுரியவர்கள். ஏற்கனவே இலட்சணக்கணக்கிலே சங்கத்துக்குப் பொருளுதவி செய்த இவ்வள்ளல் மேலும் இப்பணிக்குதவ முன்வந்துள்ளமையை பாராட்டாமல் இருக்கமுடியாது.

அவரும் அவரது குடும்பத்தினரும் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து வளம் பல பெற்றுச் சிறக்க எமது இதயங் கனிந்த வாழ்த்துக்கள்.

**ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி**
பொதுச் செயலாளர்,
கொழும்பு தமிழ்ச் சங்கம்.

# மனிதருள் மாணிக்கம், மாணிக்கம் - பாக்கியம் தந்த சுப்பிரமணியம்.

இப் பூவுலகில் மானிடராகப் பிறந்த எல்லோரும் தாம் பிறந்த பிறவிப்பயனை முழுமையாக அடைந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. பெரும்பான்மையானோர் பிறந்தோம், வாழ்ந்தோம், தமது குடும்பத்திற்காக உழைத்தோம் என்று வாழ்ந்து மடிந்துள்ளனர். ஆனால் சிலர் தன்னலத்திலும் மேலாக பொதுநலத்தை கருத்திற் கொண்டு சேவைகளையும், தொண்டுகளையும் ஆற்றி வந்துள்ளனர். சிலர் இன்றும் சேவைகளையும் தொண்டுகளையும் ஆற்றி வருகின்றனர். அவ்வாறாக கைவிட்டு எண்ணக்கூடியவர்களில் மாணிக்கம் சுப்பிரமணியமும் ஒருவராவார்.

இப் பெருமகனார் **கொக்குவில் மைந்தன் மட்டுமல்ல, கொக்குவில் இந்துக் கல்லூரி அன்னையின் தவப்புதல்வனும்** ஆவார். இப் பெருமகனார் தான் கல்வி கற்ற கல்லூரிக்கு செய்த தொண்டுகள் கணக்கிலடங்கா. இவரின் இப்பணி "தேக்கமின்றி ஓடுகின்ற நீரருவி தான் போகும் பாதைசார்ந்து நின்றிருக்கும் ஜீவன்களுக்கு வாழ்வழித்துச் செல்வது போலே" இன்றும் தொடர்கிறது. இவரது வாரி வழங்கும் வள்ளற்றன்மை கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை என்றல்லாது ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றக் கழகங்கள், வைத்திய பராமரிப்பு நிலையங்கள் என்று தொடர்ந்து கொண்டே செல்கின்றது. இதற்குச் சான்றாக கொக்குவில் மேற்கு சனசமூக நிலையக் கட்டடம், வளர்மதி சனசமூக நிலைய கணனிப் பிரிவிற்கு வழங்கிய நன்கொடை, வளர்மதி நிறைவகத்திற்கு வழங்கிய நன்கொடைகள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

இப் பெரியவரின் மேற்கூறிய சேவைகள் என் சிந்தனைக்கு எட்டியவையே. இவர் பணிகள், சேவைகள் மென்மேலும் தொடர அவரிற்கும், அவர் குடும்பத்திற்கும் சகல சிறப்புகளுடனும்கூடிய நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும் எல்லாம்வல்ல இறைவன் கொடுக்க வேண்மென பிரார்தத்திக்கிறோம்.

***சி. குகனேந்திரன்***
கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையமும், நிறைவாழ்வகமும்,
கனடா.

## திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களால் நாடளாவிய ரீதியில் பெருநிதி அளிக்கப்பட்டு அமைக்கப்பட்ட கட்டடங்கள்



கொக்குவில் இந்துக் கல்லூரிக்காக
அமைக்கப்பட்ட இராஜபரமேஸ்வரி
தகவல் தொழில்நுட்ப நிலையம்




கொழும்பு தமிழ்ச் சங்கத்தின்
மூன்றாம் மாடிக் கட்டடம்



மஞ்சவனப்பதி ஆலய வளாகத்தில்
அமைக்கப்பட்ட மாணிக்கம்-பாக்கியம்
ஞாபகார்த்த கலை கலாசார மண்டபம்



கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம், கிராம
முன்னேற்றச் சங்கம்,
சுப்பிரமணியம்-மாலதி தாய் சேய் பராமரிப்பு நிலையம்,
முன்பள்ளி என்பன ஒன்றாக அமையப்பெற்ற
மாடிக் கட்டடம்



கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில்
அமைக்கப்பட்ட இரு மாடிக்கட்டடம்



கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில்
அமைக்கப்பட்ட மேல்மாடி மண்டபம்

# வள்ளலாரின் பொதுச்சேவையின்போதான நினைவுப் பதிவுகள்



கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இரு மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டியபோது...




தமிழ்ச் சங்கத்தின் மூன்றாவது மாடிக் கட்டடத்தின் திறவுகோலை சங்கத் தலைவரிடம் கையளித்தல்



கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத் திறப்பு விழாவின்போது சங்கச் செயலாளரினால் வாழ்த்துமடல் வழங்கப்பட்டபோது...



மஞ்சவனப்பதி ஆலயத்திற்கு அமைத்து வழங்கிய முகப்பு அலங்கார வளைவு.



உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலைக்கு வள்ளலால் அன்பளிப்புச் செய்யப்பட்ட விளையாட்டு மைதானம்.

# சுப்பிரமணியம் என்ற கொடைவள்ளல்

*"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்*
*பேரறிவாளன் திரு."*

வள்ளுவப் பெருமானின் இக் குறளுக்கமைய வாழ்கின்றார் திரு. சுப்பிரமணியம் அவர்கள். ஊரின் நடுவே நிறைந்த நீருடைய நீர் நிலை எல்லோருக்கும் பயன்படுவதுபோல் உலகம் போற்றும் அறிவாளனின் செல்வம் யாவருக்கும் உதவும். திரு.மாணிக்கம் பாக்கியம் தம்பதியரின் அருந்தவப் புதல்வன் சுப்பிரமணித்தின் எழுபது வயது நிறைவைக் கேட்டு மிகுந்த மகிழ்வடைகிறோம், வாழ்த்து கிறோம். மேன் மேலும் வாழ்வாங்கு வாழ இறையருளை வேண்டுறோம். ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தாரென்பது ஒரு பொருட்டல்ல. அவர் எப்படி வாழ்ந்தார் என்பதை வைத்தே அவரை மதிப்பர். அவ்வகையில் சுப்பிரமணியம் அவர்களை உயர் ஸ்தானத்தில் வைத்து மதிக்கிறோம்.

திரு.சுப்பிரமணியம் அவர்களின் இல்லற வாழ்வில் **கணவனுக்கு ஏற்ற மனைவியாக பொறுமையே உருவான மாலதி வாய்த்தார்.** எனவே அவர்களின் வாழ்கை என்னும் நதியில் இல்லறம் என்னும் ஓடம் சீராகச் செல்கின்றது. மக்கட் செல்வம் வாய்க்கப் பெற்று சகோதரர்களின் அன்பையும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ்ன்றனர். சகோதரி ஒருவரின் மறைவினால் மனம் கலங்கி அவர் நினைவாக கணனி நிலையம் ஒன்றை "இராஜபரமேஸ்வரி கணனி நிலையம்"– நிறுவியுள்ளார். இந்நிலையம் இயங்கும் இல்லமும் அவரால் கொள்வனவு செய்யப்பட்டு கல்லூரிக்கு அளிக்கப்பட்டது.

கொக்குவில், நம் ஊர், பெற்ற தவப்புதல்வன் சுப்பிரமணியம். அவரின் பெயர் சொல்ல பலதரப்பட்ட ஸ்தாபனங்கள் கொக்குவிலில் உள. இவற்றால் கிராமம் பல சிறப்புகளைப் பெற்று உயர் நிலையில் விளங்குகின்றது. ஊர்மக்களின் வாழ்க்கை நலம், கல்வி சுகாதாரம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு பல ஸ்தாபனங்களை உருவாக்கியும், ஏற்கெனவே உள்ளவற்றை விஸ்தரித்தும் உள்ளார். மக்கள் சேவையே மகேசன் வேவை என்னும் கூற்றை உறுதிப்படுத்த, மக்கள் வாழ்வை மேம்படுத்த கொக்குவில் மேற்கு வாசிகசாலையாக மட்டும் இருந்த நிலையத்தை விஸ்தரித்து இரண்டுமாடிக்கட்டிடத்தை கட்டிக்கொடுத்து சனசமூக நிலையமாக்கி, வைத்திய சிகிச்சை வசதிகளையும் பல வயதினருக்கும் ஏற்படுத்தியுள்ளார். இங்கு தாய்–சேய் நலன் காக்கும் பிரிவு, இலவச சித்த ஆயுர்வேத வைத்திய சேவை, நூல் நிலையம், வாசிகசாலை, முன்பள்ளி ஆகிய நற்பணிகள் இடம் பெறுகின்றன. கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு தன் பெற்றோரின் நினைவாக மூன்றுமாடிக் கட்டிடத்தை மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அண்மையில் நிறுவியுள்ளார். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் இடப் பற்றாக்குறையை நீக்க கொக்குவில் புகையிரத நிலைய வீதியில் வகுப்பறைகள் கட்டி வழங்கியுள்ளார் கல்வியின் மகத்துவத்தை உணர்ந்து சேவை செய்யும் இப்பெருமகனை கல்லூரிச் சமூகம் என்றென்றும் வாழ்த்தி நிற்கும். திரு.சுப்பிரமணியமும் அவரின் வாழ்கைத்துணைவி மாலதியும் எம் கல்லூரியின் பழைய மாணவர்கள் எனச் சொல்ல பெருமைப்படுகிறோம்.

இத்துடன் அமையாது விளையாட்டுத்துறையை மேம்படுத்த பார்வையாளர் அரங்கு ஒன்றை (Stadium) அமைத்துத்தரவுள்ளார். இது ஏற்கெனவே போடப்பட்ட திட்டம் எனினும் நாட்டின் சூழ்நிலை காரணமாக சில தடைகள் ஏற்பட்ட போதும் அவர் வணங்கும் மஞ்சவனப்பதிமுருகன் அரு

ளால் தடைகள் நீங்கி அரங்கு நிறுவும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. மஞ்சவனப்பதிமுருகனுக்கு ஓர் அழகான கல்யாண மண்டபம் அமைத்துக்கொடுத்தது அவர்களின் தெய்வ பக்தியை வெளிப்படுத்து கின்றது. “கடவுளை நம்பினோர் கை விடப்படார்” என்பது ஆன்றோர் வாக்கு அவர்களின் வீட்டின் அருகேயுள்ள அருள் மிகு தெய்வம் வராகி அம்பாளின் அனுக்கிரகமும் அவர்களுக்கு உண்டு.

சுப்பிரமணியம் என்ற கொடை வள்ளலைப் பெற்ற நாம், கொக்குவில் வாசிகள், அதிஷ்ட சாலிகள். கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெருமைப் படுகின்றது. அவரும் அவரது குடும்பமும் அமைதியான, சிறப்பான வாழ்வு பெற இறைவனைப் பிரார்த்திக்கிக்கிறோம்.
கொடை என்பது ஓர் அரும் குணம். யார் கற்பித்தும் வருவது அல்ல. இயல்பாகவே உள்ளது.

*சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்*
*வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்–நித்தம்*
*நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்*
*கொடையும் பிறவிக்குணம்*

என்ற பாடலின்படி வாழுகின்றார். கொக்குவிலின் மைந்தன் சுப்பிரமணியம், மாலதி இருவரும் மேலும் பல மக்கள் சேவை செய்து, இறையருள் பெற்று சீரோடு வாழ வாழ்த்துகிறோம்.

**திருமதி. சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்** (Canada)
ஆசிரியை 1942 – 1983 (K.H.C).

# கொக்குவில் சனசமூக நிலையம் சார்பில் வழங்கும் பாராட்டு காவிய மாலை

*28.01.2010ல் எழுபதாவது வயதில் கால் பதிக்கும் உயர்திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் பொதுசேவையை கௌரவித்து கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம், "சுப்பிரமணியம் மாலதி" ஆரம்ப சுகாதார பராமரிப்பு முன்பள்ளி நிலையம் வாழ்த்தி வழங்கும் பிறந்த நாள் வாழ்த்தும் – பாராட்டுபப்பத்திரமும்.*

மாணிக்கம் – பாக்கியம் தம்பதியர் பெற்றெடுத்த மாணிக்கமே!
மாண்போடு பொதுசேவையால் உயர்ந்த மாலதியின் மணாளனே!
காலத்தால் அழியாத உங்கள் சேவையால் கொக்குவில் கிராமமே
ஞாலத்தில் பெருமையோடு தலைநிமிந்து பூரிப்பு கொள்கின்றது
கிராமத்தின் பூரிப்பில் இணைவதற்கு தாங்கள் அமைத்தளித்த
"சுப்பிரமாணியம் மாலதி ஆரம்ப சுகாதார பாராமரிப்பு,
முன்பள்ளி நிலையம் மலர் தூவி தாங்கள் பல்லாண்டு வாழ்கவென சிந்து இசைக்கின்றது.

எழுபதாவது வயதில் கால்பதிக்கும் மதிப்பார்ந்த பெரியவரே!
பழுத்த அனுபவத்தை பறைசாற்றி பணி தொடரும் பண்பாளரே!
தேவையறிந்து சேவை செய்யும் தங்கள் நல்மனது
மேதைகள் காட்டும் நற்பாதையிலும் உயர்ந்து சிந்தையில் இனிக்கிறதே
நாம் வாழ நம்கிராமம் உயர்ந்து தம் தேவையை நிறைவேற்ற
எம் அன்பிற்கினியவராய் எம்மனதில் ஊக்கம் அளிப்பவரே!
சீலத்தில் என்றும் சிறப்போடு வாழ பிறந்த நாள் வாழ்த்து கூறுகின்றோம்.

சிந்தனை சிற்பியே உங்கள் சிந்தனைக்கு வந்தனை செய்கின்றோம்
எழுபத்தைந்து இலட்சத்தை வாரி இறைத்து எமது நிலையத்தை
மாடிக் கட்டமாய் மிளிரவைத்து எம்கிராமத்தை குளிரவைத்த
நற்பணியாளர் நல்லான் சுப்பிரமணியப் பெருந்தகையயே! எம்
அன்பிற்கினியவரே வல்லவரே நல்லவரே தாங்கள் வாழ்வு
வளத்தோடு என்றும் சிறக்க பிறந்தநாளான இன்று
சூடு உகந்தான் பிள்ளையாரை நெஞ்சார இருகரம் எடுத்து இறைஞ்சுகிறோம்.

**Dr. V. வேதநாதன்**
*தலைவர்.*

**செ.சண்முகசுந்தரம் J.P**
*செயலாளர்.*

போசகர்கள் :– லயன் மா. சுப்பிரமணியம், லயன் இ.செல்வநாதன் J.P. (நகுலன்)
உபதலைவர்கள் :– இ. சிறிகாந்தன் (செந்தூர்), மு. மகேந்திராசா (சிறி)
பொருளாளர் :– அ. சண்முநாதன்
உப செயலாளர் :– பொ. பாலச்சந்திரன்
நிர்வாக சபை உறுப்பினர்கள் :– இ. சிவலிங்கம் J.P., இ. இ. விபுலானந்தன், அ. குணசிங்கம், இ. இராசநாயகம், மு. ஜெயக்குமார், சு. பிரதீபன், சு. சுரேஸ்குமார், ம. ஶ்ரீபதி, சு.மகேந்திரரசா J.P

# அறப்பணி மேலும் சிறக்கட்டும்

ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பதுகளின் முற்பகுதி என்று ஓர் ஞாபகம். திரு.ஏ.ஊ.இராமநாதன் எமது வகுப்பு ஆசிரியராகக் கடமையாற்றினார் என்றும் ஓர் ஞாபகம். சுப்பிரமணியம் வகுப்பில் ஓர் சிறந்த மாணவன். இந்த ஆண்டின் பின் சுப்பிரமணியத்துடன் ஆன தொடர்பு கிட்டத்தட்ட (கண்டால் சிரிக்கும்) என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. இதன் பின்பு சில வருடங்களின் பின் அவர் எமது வீட்டுக்கு அண்மையில் திருமணம் செய்திருந்தார்.

இந்த இடைக்காலத்தில் படிப்பில் சிறந்து விளங்கிய திரு.சுப்பிரமணியம் தனது தகப்பனாரின் தொழிலைக் கவனிக்கும் முகமாக கொழும்பு சென்றிருந்தார். இப்படி கொழும்பு சென்றிராவிட்டால் நாம் இன்று கதைக்கும் சுப்பிரமணியம் என்கின்ற மணியத்தை கேள்விப்பட்டே இருக்கமுடியாமல் போயிருக்கும். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்று சொல்வதுண்டு. ஆனால் மணியம் இந்தக் கூற்றைப் பொய்ப்பித்து திரைகடல் ஓடாமலே திரவியம் தேடலாம் என்ற நிலைக்கு வந்திருந்தார். பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் அங்கத்தவராக இருந்த திரு. சுப்பிரமணியம் தன்னுடைய வள்ளல்த் தன்மையைக் காட்டத் தொடங்கியிருந்தார்.

மஞ்சவனப்பதி ஆலயத்திற்கு ஓர் திருமண மண்டபம் அமைத்துக் கொடுத்ததன் மூலம் வெளிக் கண்களுக்குத் தெரியப்பட்டார். இதன் பின்பு கொக்குவில் மேற்கு சனசமூக நிலையக் கட்டடத்தில் ஆரம்பித்து, பின் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு ஓர் கட்டடம் அமைத்துக் கொடுத்து வெளி உலகிற்குத் தெரியப்பட்டார். இதனிடையே கொக்குவில் கிழக்கு வளர்மதி தொடக்கப் பாடசாலைக்கு கணனி வாங்கிக் கொடுத்த வள்ளல்த் தன்மையையும் தனதாக்கிக் கொண்டார்.

தற்சமயம் கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு ஓர் பார்வையாளர் அரங்கம் ஒன்றும் அமைத்துக் கொடுப்பதற்கு வேலைகள் மிகவும் துரிதகதியில் நடைபெறுவதாக கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவராக இருக்கும் திரு. இராசதுரை மூலமாக அறிகிறேன். இதையெல்லாம் நாம் அறிந்தவை, நாம் அறியாதது எத்தனை என்று அவருக்குத்தான் தெரியும். மேற்கூறிய யாவும் மற்றவர்களால் நான் அறிந்து கொண்டவை. இவரது அறப்பணி மேன் மேலும் சிறந்து விளங்க எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ச. சிவானந்தன்**
(இளைப்பாறிய நில அளவையாளர்)
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
நோர்வே.

# கொக்குவிலின் மணிமகுடம்

நாம் எல்லோரும் பிறக்கின்றோம், இறக்கின்றோம். இடையில் எமது குடும்பங்களை முன்னேற்ற இயன்றளவு முயற்சிக்கின்றோம். ஒரு சராசரி மனிதனது வாழ்வுச் சக்கரம் இவ்வாறே சுழல்கின்றது. தன்னலனை முதன்மைப்படுத்தும் எமக்குள் மனிதருள் மாணிக்கமாகத் திகழ்கின்ற பெரியார் திருவாளர் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள். இப்பெரியாரது எழுபதாவது பிறந்தநாளைக் கொண்டாடி மகிழக் கிடைத்தது எமது பாக்கியமாகும்.

யாழ்ப்பாணத்தின் உயிர்நாடி கல்வியென்றால் மிகையல்ல. இடர்கள் எத்தனையாயினும் கல்வியைக் கண்ணெனக் காப்பவர்கள் யாழ்ப்பாண மக்கள். எனினும் கடந்த மூன்று தசாப்த காலமாக எமது பகுதிகளில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் கல்வித்துறை முன்னேற்றம் எமது மண்ணில் பெரும் பின்னடைவைச் சந்தித்தது. அரச உதவிகளின்றி அல்லலுற்ற கல்விச் சமூகத்திற்கு திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள் பாடசாலைகள், கோவில்கள் சனசமூக நிலையங்கள் என எமது சமூக நிறுவனங்கள் அனைத்திற்கும் தன்னால் இயன்றளவு கைகொடுத்து உதவிய தர்மசீலன் இன்று தனது எழுபதாவது அகவையில் காலடி வைக்கின்றார்.

எமது வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியில் தனிப்பட்ட அக்கறை காட்டிய இப்பெரியவர் எமது பல்வேறு அபிவிருத்திப் பணிகளில் தன் பங்களிப்பை மனதார வழங்கினார். இன்றும் வழங்கி வருகின்றார்.

தான் உயர்ந்து, தன்னை உயர்த்திய சமூகத்தை தனி ஒரு மனிதனாக உதவி, உயர்த்திய பெருமை சுப்பிரமணியம் அவர்களது தன்னலமற்ற சேவையின் இலக்கணமாகும். இன்னும் பல ஆண்டுகள் இப்பெரியவர் நலமாக வாழ்ந்து நமக்கெல்லாம் பாதுகாவலனாக விளங்கவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவிலின் மணிமகுடமாய், அணிகலனாய் கொலுவிருக்கும் நாயகனைப் போற்றி வாழ்த்துவதில் வளர்மதித்தாய் பெருமையடைகின்றாள்.

வாழ்க! நீடுழி நலமுடன்.

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகமும்,**
**சனசமூக நிலையமும்**
**வளர்மதி நிறை வாழ்வகம்.**

சம்பியன் லேன்,
கொக்குவில்.

# கொக்குவில் தந்த மனிதருள் மாணிக்கம்

இப்பூவுலக மனிதகுல வரலாற்றில் எத்தனையோ கோடான கோடி மானிடர்கள் பிறந்து, வாழ்ந்து, இறந்து காலச் சக்கரத்தில் கடந்து போயுள்ளார்கள். அவர்களில் பலர் ஏதோ பிறந்தோம், வாழ்ந்தோம் அதற்கு மேல் தன்னையும் தனது குடும்பத்தையும் வாழ்விக்க முயன்றதுமே பொதுவான விதிமுறையாக நாம் கண்டோம். ஆனால் அதற்கு முற்றிலும் விதிவிலக்காக வாழ்க்கைத் தத்துவத்தைப் புரிந்துகொண்டு தான் சார்ந்த சமூகத்திற்கும் சக மனிதர்கட்கும் பயனுள்ள வகையில் வாழ்ந்து காட்டியோர் ஒரு சிலரே. அவர்கள் வரலாற்றில் மறக்கப்படுவதில்லை. மக்களின் மனங்களில் வாழ்ந்துகொண்டே இருப்பர். அவ்வாறான ஒருவராக நாம் வாழும் காலத்தில் எமது கிராமத்தில் எமக்கருகில் உதாரண புருஷராக மனிதருள் மாணிக்கமாய் வாழ்ந்து காட்டி நிற்பவர் திருவாளர் மாணிக்கம் சுப்பிரமணியம் ஐயா அவர்களாவர். அவ்வாறான ஒருவரது எழுபதாவது அகவையில் அவரது சேவையைப் பாராட்டி சமூக நிறுவனங்கள் ஒன்றிணைந்து விழா ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும் என்பதுடன் அதில் நாமும் இணைந்து கொண்டமையை எமது பாக்கியமாகக் கருதுகின்றோம்.

"ஆயிரம் ஆலயம் அமைப்பதைவிட ஒரு கல்விச் சாலை அமைப்பது ஆயிரம் கோடி மேன்மை" என்பர் எம்முன்னோர். அதனைத் தன்வாழ்வில் கடைப்பிடித்தவர் திருவாளர் ம. சுப்பிரமணியம் ஐயா அவர்கள். எமது பிரதேசத்தில் மூன்று தசாப்தங்களாக நிலவிய யுத்த சூழலில் அனாதரவாக கைவிடப்பட்ட கல்விச் சமூகத்திற்கு கல்விச்சாலைகள் அமைத்தும் சமூக, சமய நிலையங்களை அமைத்தும் சமூக விழுமியங்களை நிலைநிறுத்தும் பணியில் பல வழிகளிலும் தன்னாலான உதவிகளை வழங்கி சமூகம் உயர்ந்திட உதவிய கொடை வள்ளல் சுப்பிரமணியம் ஐயா அவர்கள்.

எமது கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் தனது புதிய கட்டடத்தில் முன்பள்ளி ஒன்றினை ஸ்தாபித்து எமது பகுதி மழலைகட்கு ஆரம்பக்கல்வியின் அடித்தளத்தைச் சிறப்பான முறையில் இடும் பணியினை ஆரம்பித்தபோது கல்வி புகட்டும் ஆசிரியர்கட்கு வேதனம் வழங்கியதுடன் எமக்கு உற்சாகம் ஊட்டி எமது நிலைய வளர்ச்சியில் அக்கறை கொண்டு செயற்பட்ட பெரியாரை இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

தன்னை உயர்த்தி தன் குடும்பத்தைப் போற்றித் தான் வாழ்ந்த சமூகத்தை வாழ்விக்கப் பல்வேறு சமூக நிறுவனங்களுடன் கைகோர்த்து கல்விப்பணி, சமயப்பணி, சமூகப்பணி எனப் பல்வேறு துறைகளினதும் வளர்ச்சியூடாக சமுதாயம் முழுமைபெற அளப்பரிய சேவையாற்றிய பெரியார் சமூகப் புரவலர் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் தன் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியுடன் வளமான வாழ்க்கை அமையப்பெற்று தன்பணி தொடர வாழ்க வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும்**
**விளையாட்டுக் கழகமும்,**
**கொக்குவில் இந்து முன்பள்ளி.**



கொக்குவில் இந்துக் கல்லூரி மாணிக்கம் – பாக்கியம் மண்டபத் திறப்பு விழா நிகழ்வின்போது...



கொ.இ.ஆ பாடசாலை மாணவச் செல்வங்களுடன் எமது விழா நாயகர்



கொ.இ.ஆ. பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களுடன்



கொ.இ. கல்லூரியில் பார்வையாளர் அரங்கிற்கான அடிக்கல் நாட்டு வைபவத்தின்போது...




கொக்குவில் இ.ஆ.பாடசாலையின் சுப்பிரமணியம் – மாலதி கேட்போர் கூடத் திறப்பு விழாவின்போது கல்விப் பணிப்பாளருக்கு நினைவுப் பரிசு வழங்கல்.



மாணிக்கம் – பாக்கியம் மாடிக்கட்டடத் திறப்பு விழாவின்போது முன்னாள் அதிபர் திரு. பஞ்சலிங்கம் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கியபோது...

# உயர்திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கை ஒரு நோக்கு

## பிறப்பு

| | |
|---|---|
| **பெயர் : -** | **மாணிக்கம் சுப்பிரமணியம்** |
| **தந்தை பெயர் :-** | **ஆ. மாணிக்கம்** |
| **தாயார் :-** | **பாக்கியம்** |
| **பிறந்த திகதி :-** | **28.01.1940** |
| **பிறந்த இடம் :-** | **கொக்குவில்** |

உடன் பிறந்த சகோதரர்கள் ஐந்து பேர், சகோதரிகள் இரண்டு பேர். எட்டுப் பிள்ளைகளில் இரண்டாவது புதல்வன் தான் திரு.மா.சுப்பிரமணியம் அவர்கள்.

***ஆரம்பக்கல்வி :*** கொக்குவில் மேற்கு C.C.T.M.Sல் 4ம் தரம் வரை கல்வி கற்றார். கொக்குவில் இந்து கல்லூரியில் 5ம் தரம் முதல் 11ம் தரம் வரை கல்வி கற்றார்.

மிக இளவயதிலேயே தந்தையை இழக்க நேர்ந்தமையால் உயர்கல்வி கற்கும் ஆர்வம் இருந்தும் கற்க இயலாத நிலையில் தந்தையின் வழியில் மாமனாரின் உதவியும் கைகொடுக்கப் படிப்படியாகத் தொழிலில் முன்னேறி உயர் நிலை அடைந்தார். சிறு வயதிலிருந்தே கட்டுப் பாடு, கண்டிப்புடன் செயற்பட்டவர்.

***மணவாழ்வு :-*** கொக்குவில் மேற்கு திரு.க.திருச்செல்வம்–இரத்தினம்மாவின் மூத்த மகளான மாலதியை 1971ல் தன் துணைவியாக்கிக் கொண்டார். மூன்று ஆண், இரண்டு பெண் என ஐந்து குழந்தைச் செல்வங்களையும் பெற்றார். தன் ஐந்து பிள்ளைகளையும் தான் கல்வி கற்ற கொக்குவில் இந்துக் கல்லூரியிலே கல்வி கற்க அனுப்பினார். நாட்டுச் சூழல் காரணமாக 1990களில் குடும்பத்தை கொழும்பில் வதியச் செய்தார். மூன்று மகன்களும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தனர். இரு மகள்மாரும் கொழும்பு சைவ மங்கையர் கழகத்தில் கல்வி கற்றனர். மூத்த இரு புதல்வர்களையும் லண்டனில் உயர் கல்விபெறச் செய்தார். சிரேஷ்ட புத்திரன் சுகுணனுக்கு, தலையாளியை வசிப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஆங்கில ஆசிரியையாகக் கடமையாற்றிய ஷஜித்தாவை மணம் முடித்து மூத்த மருமகளாக்கிக் கொண்டார். அவர்கள் கனடாவை வசிப்பிடமாகக் கொண்டனர். அஸ்வின், வர்திகா, சமிரா எனும் மூன்று பேரப்பிள்ளைகளையும் பெற்றார். 2வது மகன் அமுதன் என்பவருக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த யசோவிற்கு மணஞ் செய்வித்தார். லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட இவர்களால் அஸ்மிரன் எனும் பேரனை அடையப் பெற்றார்.

மூத்தமகளான சுகந்தினியை சாசாவகச் சேரியைச் சேர்ந்த திருனந்தி என்பவருக்கு மணஞ் செய்வித்து அமிருத்தா, வைஷித்தா எனும் இரு பேர்த்திகளையும் பெற்றார். கனடாவில் வதியும் ஜெயசீலனைத் தன் இரண்டாவது புத்திரி கார்த்திகாயினிக்கு மணஞ்செய்து ஹரி, ஹரிசா எனும் பேரப்பிள்ளைகயும் கிடைக்கப் பெற்றார். கனிஷ்ட புத்திரன் இராகுலனைத் தன் தொழில் வளம் பெருக்கித் தன்னுடன் இணைத்துக் கொண்டார்.

இவ்வாறு தன் குடும்பத்தை வளம்படுத்தி, உயர்நிலை பெறச் செய்தது போலவே தான் பிறந்த மண்ணுக்காய், தன் ஊரையும் வளப்படுத்த முனைந்தார். அதன் முதற்படியாகத் தன் தாயார் காலமாகியதும், அவரது ஞாபகார்த்தமாக கொக்குவில் இந்துக் கல்லூரிக்குப் புலமைப் பரிசில் ஒன்று வழங்கினார். அதனைத் தொடர்ந்து கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வாசலில் அலங்கார வளைவு ஒன்றை அமைத்துக் கொடுத்தார். தேவை கருதி பலரின் வேண்டு கோட்கிணங்க, மஞ்சவனப்பதி முருகன் ஆலய

தெற்குப் புறத்திலே கல்யாண மண்டபம். ஒன்றை அமைத்து, நிதித்தேவையைப் பூர்த்தி செய்தார். 2005ல் கொக்குவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் இரண்டுமாடி கொண்டதாக ஆரம்ப சுகாதார பராமரிப்புக்கும், முன்பள்ளி நிலையத்துக்குமாக அமைத்து வழங்கினார். இன்று சுப்பிரமணியம்–மாலதி ஆரம்ப சுகாதார பராமரிப்பு முன்பள்ளி நிலை யம் மிகச் சிறப்பாக இயற்கி வருகின்றது. அத்துடன் கொக்குவில் மேற்கில் தன் இல்லத்திற்கு அண்மையிலுள்ள குணபாலன் வித்தியா சாலையின் விளையாட்டுத் திடலுக்காய் அயற்காணி ஒன்றினையும் வாங்கி பாடசாலைக்கு வழங்கினார்.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தான் கல்வி கற்ற கல்லூரிக்கு பற்பல பணிகள் செய்தார். கிழக்குப் புறத்தே வீட்டுடனான காணியைக் கொள்வனவு செய்து பாடசாலைக்கு வழங்கியதுடன், தன் மூத்த சகோதாரி ஞாபகார்த்தமாக இராஜ பரமேஸ்வரி கணனி நிறுவனம் ஒன்றை அமைத்துக் கொடுத்தார்.

கல்லூரியின் தெற்குப் புறத்தே மாணிக்கம் பாக்கியம் ஞாபகார்த்தமாக இரண்டு மாடி கொண்ட கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுத்தார். இரண்டு மாடிகளும், வகுப்பறைகள் கொண்டதாகவும், கீழ்த்தளம் 100 அடி மண்டபம், வகுப்பறை கொண்டதாகவும் அமைக்கப் பெற்றது. கல்லூரியின் பார்வையாளர் அரங்கின் தேவை கருதி பலரின் வேண்டுகோட்படி மைதானத்தின் தென் கிழக்கு மூலையில் பார்வையாளார் அரங்கினை ஒன்றரைக் கோடி செலவில் அமைக்க முன்வந்து செயல்திட்டங்கள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கல்லூரி நூற்றாண்டைக் கொண்டாடும் இவ் 2010ல் அந்த அரங்கும் பூர்த்தியாகும் என்பது திண்ணம். யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க பாடசாலை சின்னஞ்சிறார்களின் நிகழ்வுகளுக்காய் மாலதி சுப்பிரமணியம் என்னும் மண்டபம் ஒன்றினையும் அமைத்துக் கொடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கொக்குவில் மேற்கு முதலி கோவில் புனரமைப்பு வேலைக்கு பெருநிதி வழங்கினார். மேலும் ஸ்ரீ கதிரேசன் வீதி கொழும்பு–13இல் அமைந்துள்ள கதிர்வேலாயுத சுவாமி கோயில் பரிபாலன சபைத் தலைவராகக் கடமையாற்றி அக்கோயிலுக்கு அளப்பரிய சேவையாற்றி வருவது சைவமக்கள் பெற்ற பெரும்பேறாகும்.

மேலும் கொழும்பில் தமிழ்ச் சங்கத்திற்கு பெருநிதியில் 3ம் மாடிக் கட்டடத்தையும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு இரண்டு மாடிக் கட்டடத்தையும் அமைத்து கொழும்பிலும் தனது வள்ளல்த் தன்மையை விரிவாக்கினார்.

பொதுச் சேவை ஆற்றுவோர் அருகிவரும் இக் காலத்தே இது என் பணி நற்பணியாம் என்று உள்ள நிறைவுடன் இவராற்றும் சேவை அளப்பரியதே. பணம் படைத்தவர்கள் எத்தனையோ பேர் உள்ளார்கள். ஆனால் அவர்கள் சமூகத்துக்குப் பிரயோசனமாக செய்வது மிக அரிதே. ஆனால் எமது பழைய மாணவனான திரு. மாணிக்கம் சுப்பரமணியம் செய்த பல்வேறு கொடை அளிப்புக் கைங்கரியம் இந்த நூற்றாண்டுக்கே அழகு சேர்ப்பதாம். நாமறிந்த வகையில் எந்த ஒரு பாடசாலையிலும் பழைய மாணவர் செய்யாத பற்பலபணிகளை இவராற்றி வருவது ஊருக்கே சிகரம் வைத்தாற் போலாகும். பாரதக் கதையின் வரலாற்றில் அன்றைய கொடை வள்ளல் கர்ணன் போல், கொக்குவில் இந்துவுக்கென இன்றைய வரலாற்றில் கொடை வள்ளலாக மணியம் திகழ்கின்றார். கல்லூரி நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் இந்த ஆண்டில், வள்ளல் தம் எழுபதாவது அகவையினை நாமும் கொண்டாடி நிற்கின்றோம்.

இவருக்கு நோய் நொடியில்லா நீண்ட ஆயுளையும், சுகத்தையும் நல்க எல்லாம் வல்ல சிவசுப்ரமணியக் கடவுளை வேண்டி நிற்கின்றோம். தமிழ் பேசும் மக்களுக்கான இவரது கொடை வண்மை மேலும் சிறக்க ஆண்டவன் அருள் புரிவாராக.

**திருமதி. ரதி சந்திரநாதன்**
ஆசிரியை,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# மக்கள் பார்வையில் மணி அண்ணா

- சமூகஜோதி
- மாணிக்கம் பாக்கியம் தந்த மரகதம்
- அன்பும் கொடையும் அறசிந்தனையும் கொண்டவர்
- ஆளமாக சிந்திந்துப் பணியாற்றுபவர்
- அறிவு ஆன்மீகம் மனிதநேயம் கலந்த பண்பாளர்
- ஈந்து சிவந்த கரங்கள் உடையவர்
- ஊர் போற்றும் உத்தமர்
- மாரியைப் போல் ஈயும் பாரியைப் போன்ற வள்ளல்.
- சாதி சமயத்திற்கு அப்பாற்பட்ட நற்பணியாளர்
- உறவினற்கு உதவும் உத்தம குணாளன்
- உறவை பலப்படுத்தும் உத்தமர்
- உழைப்பின் மூலம் திரட்டிய செல்வத்தின் பகுதியை தர்ம வழியில் செலவு செய்பவர்.
- நவீன உலகின் பாரிவள்ளல்
- கொடைவள்ளல், கொடைமாமணி
- நவீன கர்னன்
- மனிதருள் மாணிக்கம்
- உன்னதமான மாமனிதர்
- எமது மண்ணிற்கும் மாசற்ற மனித நேயத்திற்கும் சன்றானவர்
- மாணிக்க மணி
- சீர்குன்றா மாண்பாளர்
- சொல்லும் செயலும் ஒன்றாகவே என்றும் விளங்கும் பெரியவர்
- தூய்மையான எண்ணமும் உறுதியான செயற்திறனும் படைத்திட்ட பண்பாளர்
- தேவை அறிந்து சேவை செய்பவர்
- ஓயாத உழைப்பாளி, ஓயாத கொடையாளி
- தன்னலம் கருதாத தயாளன்
- சேவை மனம் படைத்த வள்ளல்
- நாட்டுப் பற்று, சமூகபற்று சமயப்பற்று, கல்விப்பற்று நிறைந்த பெரியார்
- குடும்பத்தின் ஒளி விளக்கு
- மண்ணின் மைந்தன் கொக்குவில் பெற்றெடுத்த கொடையாளி
- செயற்றிறன் மிக்க நிர்வாகி
- மாலதிக்கு உகந்த மணாளன்
- பிள்ளைகளை நல் வழியில் வாழ்வித்த வழி காட்டி
- அன்பான அப்பா பண்பான அயலவர்.

இத்தகைய பண்பாளர் எம்மோடு வாழ்வதற்கு என்ன தவம் செய்தோமோ? வாழ்க பல்லாண்டு வளர்க அவர்தம் பணி.

**து. தர்மானந்தசிவம்**
ஆசிரியர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# நன்றி நவில்கின்றோம்

சைவத்தையும், தமிழையும் வளர்க்க நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்தில் வந்துதித்து சைவச் சிறுவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக கல்விச் சாலைகளை அமைத்தது மட்டுமல்லாமல் எமது தமிழ்ச் சமூகத்தின் சைவமதம் அழிந்துவிடாமல் ஆன்மீகத் துறையில் அரும்பாடுபட்டார். இதன் பிற்பாடு சேர்.பொன் இராமநாதன் அவர்கள் நாவலர் பணியைத் தொடர்ந்து தமிழ்ச் சமூகத்தின் கல்வியையும், சமய மேம்பாட்டையும் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் ஆண்களுக்கான, மகளிருக்கான கல்லூரிகளையும் மற்றும் ஆலயங்களையும் தனது சொந்த நிதியில் அமைத்து எமது தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றினார். இன்றும் எமது சமூகம் அவர்களை நன்றியுடன் நினைந்து கொள்கின்றது. அவர்கள் வழியில் 21ம் நூற்றாண்டில் கல்வி, ஆன்மீகம் மற்றும் பல துறைகளுக்கும் கொக்குவில் பெற்றெடுத்த கொடைவள்ளல் உயர்திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள் பெருநிதி அளித்து சேவையாற்றிவருவது யாவரும் அறிந்ததே. இதற்கமைவாக இப்பெருமகனின் 70வது அகவை நிறைவை வாழ்த்தும் முகமாகவும் இவர் ஆற்றிக் கொண்டிருக்கும் சேவைகளைப் பாராட்டும் முகமாகவும் எடுக்கப்பட்டிருக்கும் இப் பெருவிழாவிற்கு அவரை வாழ்த்தி ஆசியுரை வழங்கியிருக்கும் அந்தணப் பெருமக்களுக்கும், அவரது பொதுநல சேவையைப் பாராட்டி மலரில் பதிப்பதற்கு பாராட்டுச் செய்திகள் அனுப்பிய சமூகப் பிரமுகர்களுக்கும், இவ்விழாவில் வாழ்த்துரை வழங்கிய சான்றோர்க்கும் மேலும் நிகழ்வில் கலை நிகழ்வுகளை நிகழ்த்திய நிறுவனங்களுக்கும், அதில் பங்குகொண்ட மாணவச் செல்வங்களுக்கும், நெறிப்படுத்திய துறைசார் விற்பன்னர்களுக்கும் நன்றி கூறுவதுடன் மற்றும் இந்நிகழ்வில் பங்குகொண்டு வாழ்த்துக்கள் வழங்கிய சேவை நலன் விரும்பிகளுக்கும் இவ்விழாவில் மங்கள இசை வழங்கிய இசைக் கலைஞர்களுக்கும், விழா சிறப்பாக நடைபெறுவதற்கு உதவிய அனைவருக்கும் குறிப்பாக கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள், மற்றும் சக உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இவ் அழகிய மலரினை வர்ண அமைப்புடன் வடிவமைத்த "அன்ரா" நிறுவனத்திற்கும், இப்பாராட்டு மலரினை, உருவாக்க முன்னின்று உழைத்த இதழாசிரியர் திரு. து.தர்மானந்தசிவத்திற்கும் நன்றிகள். அத்துடன் வேறும் பல வழிகளிலும் உதவி செய்த பெற்றோர், நலன் விரும்பிகள் யாவருக்கும் நன்றி கூறுவதுடன் இவ்விழாவினை ஏற்பாடு செய்ததுடன், நிதிகள் வழங்கிய விழாக்குழுவினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இ. செல்வநாதன் J.P**
விழாக்குழுச் செயலாளர்.

# நிகழ்ச்சி நிரல்

3.30 : விழா ஆரம்பம் விசேட பிரார்த்தனை

(கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயம்)

3.55 : மங்கல விளக்கேற்றல்

4.00 : *தேவாரம்*

4.05 : மங்கள வாத்தியம்

4.30 : வரவேற்பு நடனம்

4.35 : வரவேற்புரை

**திரு. அ. சத்தியமூர்த்தி** (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழகம்)

4.40 : ஆசியுரை

1) **சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள்**

(ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்)

2) **சிவப்பிரம்மஸ்ரீ. சொ. இ. விக்னேஸ்வரக் குருக்கள்**

(கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்)

4.45 : தலைமையுரை

4.55 : வாழ்த்துரைகள்

1) **திரு என். தனபாலசிங்கம்**

(அதிபர், உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை)

2) **அதிபர் திருமதி. செ. சகாதேவன்**

(அதிபர், கொக்குவில் இந்து அதிபர் ஆரம்ப பாடசாலை)

3) **திரு.அ. அகிலதாஸ்** (அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)

4) **திரு.ஆ.சி. நடராஜா** (முன்னாள் அதிபர், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், பொது முகாமையாளர், தினக்குரல்)

5) **திருமதி.அ. வேதநாயகம்** (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

6) **திரு.பா. செந்தில்நந்தனன்** (பிரதேச செயலர், நல்லூர்)

7) **பேராசிரியர், பொ. பாலசுந்தரம்பிள்ளை**

(வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர் – யாழ். பல்கலைக்கழகம்)

8) வாழ்த்துப்பா வழங்கல் : விழாக்குழு

5.55 : நூல் வெளியீடு,

வெளியீட்டுரை : **பேராசிரியர். க. தேவராஜா**

(பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

6.05 : பட்டம் வழங்கிக் கௌரவித்தல்.

6.30 : கௌரவிப்பு நிகழ்வு

6.40 : ஏற்புரை – விழா நாயகன்

6.45 : நன்றியுரை

**லயன் இ. செல்வநாதன்** J.P. (செயலாளர் விழாக்குழு)

7.00 : கலை நிகழ்வுகள்

1) கொக்குவில் இந்துக் கல்லூரி

2) கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்

3) வளர்மதி சனசமூக நிலையம்.


4) கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை


5) கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்.


8.00 : இராப்போசன விருந்து













Printed by: ANDRA DIGITAL IMAGE T.P: 021-4590268